# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை25 ஞாயிற்றுக்கிழமை(10-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:14


## வெள்ளியன்று கடலுக்குச் சென்ற குருநகர் மீனவர்கள் 11பேர் இன்னும் வீடு திரும்பவில்லை!

குருநகர்,டிசெ.10

கடந்த வெள்ளியன்று குடாக் கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் பதினொரு பேர் நேற்று மாலை வரை வீடு திரும்பவில்லை என்று குருநகர் மீனவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இவர்கள் வீடு திரும்பாதது குறித்து குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச்சங்கம் குருநகர்ப் பகுதி படை அதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளது.

குருநகரைச் சேர்ந்தவர்களான யேக்கப் பற்றிக்குமார்(வயது30), யேக்கப் கீதபொன்கலன்(வயது27), அன்ரன் றொபின்சன்(வயது23), மத்தியாஸ் பெனடிக்ற் யோகின்சன் (வயது38), அன்ரனி அனிற்றஸ் ரூபன் (வயது33), யேசுதாஸன் பேடினன்ட் (வயது36), செபமாலை மரியகுமார் (வயது34), யோசப் விஜயகுலராசா (வயது35), இராயப்பு மத்தியூஸ் (வயது42), அன்ரனிலெகின் அல்லது றஜிஸ்ரன் (வயது30), கிறிஸ்தோபர் லேனாட் அல்லது கமல்(வயது34), ஆகிய பதினொரு மீனவர்களுமே நேற்று மாலைவரை வீடு திரும்பவில்லை.

இதேவேளை - குடாக்கடற் பகுதியில் தொழிலுக்குச் செல்ல மீனவர்களுக்கு நேற்று அனுமதி வழங்கப்படவில்லை. (ஐ-51-17-5)

## 50 ஆண்டு பழைமையான டாங்கிகள் செக் குடியரசிடமிருந்து கொள்வனவு!

### ஆர்.பி.ஜிக்கும் தாக்குப் பிடிக்காதாம்

கொழும்பு,டிசெ.10

அண்மையில் செக் குடியரசிடமிருந்து அவசர அவசரமாக அரசு வாங்கிய முப்பது யுத்த டாங்கிகளும் தற்போதைய சண்டைகளில் தாக்குப்பிடிக்க முடியாதவை என்றும்-

அவை சுமார் 50 ஆண்டுகள் பழைமையான தயாரிப்பைச் சேர்ந்தவை என்றும்,-

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் பாதுகாப்புச் செய்தியாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான தனது கட்டுரையில் அவர் வெளியிட்டிருக்கும் சில தகவல்கள் வருமாறு:-

மிகப் பெரிய "யானை சைஸில்"- அமைச்சரவையையும் மற்றும் பிரதி அமைச்சர்களையும் அரசு நியமித்ததனால் அதனைப் பேணுவதற்கு மக்கள் பல மில்லியன் ரூபாவை வாரி இறைத்துக் கொண்டுள்ளனர். இதனால் வாழ்க்கைச் செலவு உயர்ந்து விட்டது.

இது போதாதென்று ஆயுதத் தரகர்களும் இங்கு 'குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும்' பாணியில்- நாட்டைச் சுரண்டுகின்றார்கள். பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட ஆயுதங்கள் பல நூறு கோடி ரூபாய்களுக்கு வாங்கிக் குவிக்கப்படுகின்றன. அவற்றின் சுமையும் சாதாரண மக்கள் மீதுதான்.

ஆனையிறவு வீழ்ச்சியையடுத்து உலக நாடுகளில் விழுந்தடித்து- அவசர அவசரமாக- ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன. அந்த வகையில் செக் குடியரசு 30க்கும் அதிகமான டாங்கிகளையும் விநியோகித்தது. 1950களில் உற்பத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுகள் மேலும் தாமதமாகும்!

## அடுத்த ஒரு மாதத்துக்குள் நடக்கச் சாத்தியமில்லை

கொழும்பு,டிசெம்பர்10

**நோர்வேயின் ஏற்பாட்டில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுகள் அடுத்த ஒரு மாத காலத்துக்குள் நடைபெறுவதற்குச் சாத்தியமில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.**

**பேச்சுக்கான முன்முயற்சிகளில் தொடர்ந்து முட்டுக்கட்டை நிலையே நிலவுவதாகவும் அவை தெரிவித்தன.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுகளுக்கு வழி செய்யும் உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக இரு தரப்பிலும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய செயற்றிட்ட அட்டவணை ஒன்றை சமாதான முன்முயற்சிகளில் நடுவராகச் செயற்படும் நோர்வேயின் விசேட தூதுவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டில் இருந்து திரும்பியவுடன் சமாதான முன்முயற்சிகள் குறித்து ரணிலுக்கு ஜனாதிபதி விளக்குவார்

கொழும்பு,டிசெ.10

தற்போது மேற்கு நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் ஜனாதிபதி சந்திரிகா, நாடு திரும்பியதும் -

நோர்வேயின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் சமாதான முன் முயற்சிகள் குறித்தும், அது தொடர்பாக அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து அவருக்கு எடுத்துக் கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் எத்தகைய வழிமுறைகளில் நடத்தப்படும் என்பது தொடர்பான அடிப்படை விடயங்களை எதிர்க் கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 24ஆம் திகதி மேற்கு நாடுகளுக்கான தனது சுற்றுப் பயணத்தை ஆரம்பித்த ஜனாதிபதி எதிர்வரும் 17,18ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெறும் - இலங்

(16ஆம் பக்கம் பார்க்க)

### கதிர்காமர் இந்தியா செல்கிறார்

கொழும்பு,டிசெ.10

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்வரும் வெள்ளியன்று இந்தியா பயணமாகின்றார்.

புதுடில்லியில் இரண்டு நாள்கள் தங்கியிருக்கும் அவர், நோர்வே ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான முன்முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவார் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஜனாதிபதிக்கு மகஜர்

திருகோணமலை,டிசெ.10

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொடரும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று திருகோணமலையிலுள்ள தொண்டர் நிறுவனங்கள் கூட்டாக ஜனாதிபதியிடம் கோரியுள்ளன.

இது தொடர்பாக தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டு திருகோணமலை பிரதேச செயலர் எஸ்.வேலும்மயிலும் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர். (ஐ-5)

### கிழக்கில் மனித உரிமைகள் தின ஊர்வலங்கள்

கொழும்பு,டிசெ.10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெற உள்ளன.

திருகோணமலை மூதூர்ப் பகுதியில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களுக்கும் கல்வி,

(16ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் ஜே.வி.பி. பொதுக்கூட்டம்

கொழும்பு,டிசெ.10

சமாதான முயற்சிகள் என்ற போர்வையில் நாட்டின் உள் விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. அமைப்பு எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது. 13ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு ஹைபாக் மைதானத்தில் இக் கூட்டம் நடைபெறும். (ஐ-6)

### மட்டுவிலில் சிப்பாய் பலி

கொழும்பு,டிசெ.10

மட்டுவில் வடக்கில் நேற்று முன் தினம் காலை விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-5)

## சிவிலியன்கள் செல்லும் வாகனங்களில் படையினர் பயணம் செய்யக் கூடாது!

### இதை வலியுறுத்தி மட்டு நகரில் நாளை பேரணி

மட்டக்களப்பு,டிசெ.10

✪ பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் படையினர் பயணம் செய்யக்கூடாது.

✪ பொதுமக்களின் போக்குவரத்துக்களைப் பாதிக்கும் வகையில் நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

- மேற்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து மட்டக்களப்பு நகரில் நாளை திங்கட்கிழமை பேரணி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வைத்தியர் சங்கமும் மட்டக்களப்பு பொது வைத்தியசாலை ஊழியர் சங்கமும் இணைந்து இந்தப் பேரணியை நடத்த உள்ளன.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ் ஒன்று கடந்த புதனன்று சத்துருக்கொண்டான் பகுதியில் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகியது தெரிந்ததே.

அந்த பஸ்ஸில் பொதுமக்களுடன் சேர்ந்து பொலீஸாரும் பயணம் செய்தனர். அவர்களில் கான்ஸ்டபிள் ஒருவரும் சிவிலியன்கள் மூவ

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் பயணிகளுடன் 'லங்கா முடித்த' வருகின்றது

### திருமலையிலும் 250 பயணிகள் ஏமாற்றம்

திருகோணமலை,டிசெ.10

திருகோணமலையிலிருந்து நேற்று மாலை 6 மணியளவில் ஆயிரம் பயணிகளுடன் புறப்பட்ட 'லங்கா முடித்த' கப்பல் இன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

இந்தக் கப்பலில் பயணஞ் செய்வதற்கு ஆயிரத்து 250 பயணிகளுக்கு திருகோணமலை பிரதேச செயலகத்தினால் டிக்கெட்டுகள் வழங்கப்பட்ட போதும் இறுதி நேரத்தில் 250 பயணிகள் திருப்பியனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தைத் தீவிரப்படுத்த திட்டங்கள் தயாராகின்றன!

### பிரதமர் ரத்னசிறி தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.10

யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்திருக்கின்றார்.

கிழக்கு எல்லைப்புறக் கிராமங்களின் பாடசாலை மாணவிகளைக் கடந்த வெள்ளியன்று கொழும்பில் சந்தித்தபோது அவர்கள் மத்தியில் பேசுகையில் பிரதமர் இத்தகவலை வெளியிட்டார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

PHONE 2789

AKESAN COMMUNICATION JAFFNA

FAX 2789

மங்களகரமான திறப்பு விழா

**ஆகீஷன்** தொலைத் தொடர்பு நிலையம்

(தேவி அச்சகத்தினரின் சார்பு நிறுவனம்)

நாளை (11.12.2000) திங்கட்கிழமை நண்பகல்

12.20 முதல் 1.50 வரையுள்ள

சுப நேரத்தில் ஆரம்பமாகிறது.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

197B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (81521)



## கர்நாடக இசை ஒலி நாடா

யாழ் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளரும்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டதாரியுமான
**ஸ்ரீ. தர்ஷனன்** பாடிய ஒலி நாடாக்கள்
கிடைக்கும் இடங்கள்:-

பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் - சுன்னாகம்
கல்யாணி கிறீம் ஹவுஸ் - யாழ்.
வசந்திஜா எலக்ரிக்கல்ஸ் - சுன்னாகம்.

* அம்மன் கவசம்
* கர்நாடக இசை பாகம் -1,2
* N.C.O.M.S. - செய்முறை - 1st GRADE

வெளிவரவுள்ளது.

**முகவரி: செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம்.** (81530)


## ஆண்டொன்றில் ஆறாத நினைவுகள்



## திருமதி தாரணி சுவேந்திரன்

தாரகையாய் வாழ்ந்த எம் தாரணியே!
எம்மைத் தரணியில் தவிக்கவிட்டு சென்றதேனோ?
உன் அறத்தைக் கண்ட அந்தகன் அன்பு கொண்டனனோ
இல்லை - அவனியில் அதர்மம் கண்டு நீ
அறத்தைத் தேடிச் சென்றாயோ?

சாந்தி!

*இணுவில் மானிப்பாய் வீதி,*
*பலாவோடை.*

கணவர், மகள்,
பெற்றோர், சகோதரத்தினர்

(C/14232)

## நன்றி கூறுகின்றோம்

எங்கள் அன்புத் தந்தை
இணுவில்

### அமரர் பெரியதம்பி கந்தையா

அவர்கள் 22-11-2000 அன்று காலமான செய்தியறிந்து, எமது இல்லம் வந்து அன்னாரின் இறுதி வைபவத்தைச் சிறப்பாக நிறை வேற்றி ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையம் வைத்து மரியாதை செய்த அன்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர் களுக்கும், அஞ்சலியுரையாற்றியவர்களுக்கும், தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த அன்பர்கள் அனைவருக்கும், குறிப்பாக மன்னார் வாழ் கல்விச் சமூகத்தவர்கள், மன்னார் வர்த்தகர்கள் மற்றும் பிற மாவட்ட அன்பர்கள், வெளி நாடுகளில் வசிக்கும் அன்பர்கள், அனைவருக்கும் எமது தந்தையின் அன்புக்குப் பாத்திரமாகி தொடர்ந்து எம்மை ஆறுதல் செய்துதவி வரும் அன்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

திருமதி தங்கம்மா கந்தையா
(மனைவி)
க.இரத்தினபூபாலன் - மகன்
(அதிபர் கௌரி அம்பாள் கனிஷ்ட வித்தியாலயம்,
திருக்கேதீஸ்சரம், மன்னார்)
DR.க.பாலசுப்பிரமணியம்
(மகன் - இணுவில்)
க.அருணகிரிநாதன்
(மகன் - இலண்டன்)
க.அருள்சோதி
(மகன் - கனடா)

*'முருகவாசா'*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

(81529)

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில சமாசத் தலைவர் ச.முருகனேசன் தலைமையில் நடைபெறும். (ம.5)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று

சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்றாகும். இதனையொட்டி நாடெங்கிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையில் உலகில் அதிகளவு மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளில் ஒன்றாக இலங்கையையும் சுட்டிக்காட்டியுள்ளது. (.ம)

## ஷெல் வீச்சால் ஆலயம் சேதம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் பிரபல்யம் பெற்ற மண்டுவில் கண்ணகை அம்பாள் (சோலை அம்மன்) ஆலயம் ஷெல்வீச்சுக்களால் பலத்த சேதங்களுக்கு உள்ளாகி இருப்பதுடன் ஆலயத்திற்குச் சொந்தமான பெறுமதிமிக்க பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன என்று அங்கு சென்று திரும்பிய ஆலயப் பிரதம குரு க.கிருபானந்தக்குருக்கள் தெரிவித்தார்.

ஆலயத்தின் அனைத்து கதவுகளும் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க பொருள்கள் சூறையாடப்பட்டதுடன் ஏனைய பொருள்கள் ஆலயத்தினுள் வீசப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் ஆலய இரும்புக் கதவுகள் வெட்டப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.(இ-117)

## காலவதியான 'பிஸ்கட்' அழிப்பு

நெல்லியடி,டிசெ.10

நெல்லியடிப் பகுதியில் உள்ள கடைகளை திடீர் பரிசோதனை செய்த, பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கிருந்து காலவதியான பிஸ்கட் வகைகளைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

நெல்லியடிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.ரவிச்சந்திரன் தலைமையில் கடந்த புதன்கிழமை சென்ற இக்குழுவினர் நெலலியடி சந்தைப் பகுதி, வெளிப பகுதிகளில் உள்ள சில கடைகளிலிருந்து பிஸ்கட்வகை சொக்லேட் வகை போன்றவைகளைக் கைப்பற்றி அழித்துள்ளனர். (ஜ-109)

## நியமனக் கடிதம் வழங்கல்

வலிகிழக்கு,டிசெ.10

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் பூ. குணசிங்கமும், வலி. கிழக்குப் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் யு.எல்ரவியும் அன்றையதினம் நியமனக் கடிதங்களை வழங்குவார்கள். (ஜ-180)

## 14 அகதிகள் தமிழகத்திற்கு

இலங்கையிலிருந்து 14 அகதிகள் கடந்த வியாழனன்று இந்தியா சென்றுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலில் இருந்து 6 குடும்பங்களைச் சேர்ந்த இந்த 14 பேரும் அதிகாலை வேளை தனுஷ்கோடி கடற்கரையில் காணப்பட்டதாகவும் அவர்கள் அனைவரையும் தனுஷ்கோடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர். (ம-8)

## பருத்தித்துறையில் "இந்துருவலி" கப்பல்

நெல்லியடி,டிசெ.10

கொழும்பிலிருந்து 2ஆயிரத்து 900மெற்றிக் தொன் பொருள்களை ஏற்றிய "இந்துருவலி" கப்பல், நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் யாழ். செயலகத்துக்குரிய அரிசி, பால்மா வகை என்பன எடுத்துவரப்பட்டுள்ளன.(ஜ-109)

## கண்ணீர் அஞ்சலி

யா/நவாலி மகா வித்தியாலய ஆசிரியை
**செல்வி தர்மவதனி ஆறுமுகராஜாவின்**
அன்புத் தந்தையார்

### பொன்னையா ஆறுமுகராஜா

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ நவாலி மகாவித்தியாலயம்.

(81524)

## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்
சங்கீத பூஷணம்

### சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை

எமது குடும்பத் தலைவரின் பிரிவுத் துயரில் நேரிலும் செய்தி வழியூடாகவும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தினர்க்கும் பொது அமைப்புப் பிரதிநிதிகளுக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகத்துக்கும், கொக்குவில் சமூகத்துக்கும் மக்கள் வங்கிப் பணியாளர்களுக்கும், நோயுற்ற வேளையில் சேவையுள்ளத்துடன் மருத்துவ உதவிகள் புரிந்த யாழ்.போதனா வைத்தியசாலை 27ஆம் இலக்க விடுதி மருத்துவர்கள், தாதிகள், பணியாளர்களுக்கும், நல்லூர் மெடி எயிட்ஸ் வைத்திய நிலையத்தினர்களுக்கும், எமது இதயபூர்வ நன்றிகள்.

எமது இல்லத்தில் நாளை 11.12.2000 திங்கட்கிழமை நடைபெறும் அமரரின் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

*251/2 பருத்தித்துறை வீதி,*
*சங்கிலியன் தோப்பு (முன்பாக)*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(C/14234)

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் நாகேந்திரா

(ஓய்வு பெற்ற லிகிதர் Education Dept.)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் நாகேந்திரா 09-12-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணம் (குணமக்கா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயில்வாகனம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, காலஞ்சென்ற தங்கமலர், ஜீவாமிர்தம், ஜோகரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.12.2000) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P. NO.021- 3439
*"கோமதி வாசம்"*
*இணுவில் ரோட்,*
*மானிப்பாய்.*

தகவல்:
மைத்துனர் என்.நவரட்ணசிங்கம்
(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

(81527)

### சிவசுப்ரமணியம் அருணகிரிநாதன்

(இளைப்பாறிய **M.S.O** தபால் திணைக்களம், பொருளாளர் விவசாய சம்மேளனம், கொக்குவில் கிழக்கு)

திருநெல்வேலியைப்பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்ரமணியம் அருணகிரிநாதன் 08-12-2000 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சந்திரதேவியின் அன்புக் கணவரும் திருமதி கி.சுதா (கொழும்பு), கிரிதரா (யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிவகுமார் (TKS TEX கொழும்பு), சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் மெதுர்ஷன், யதுசிகனின் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கேதீஸ்வரம்"
*கோணாவளை வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல்:-
அ.கிரிதரா
(மகன்)
யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம்.

(81531)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 - 10 - 1935

மறைவு 10 - 11 - 2000

## திருமதி சவுந்தரம்மா தர்மலிங்கம்

அவர்களின் நினைவு அஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (10.12.2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும், மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

ம.தர்மலிங்கம் (கணவர்),
பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

*ஏழாலை மத்தி,*
*ஏழாலை.* (81491)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 24 - 06 - 1947

விண்ணில் 13 - 12 - 1997

## திருமதி
## மகேஸ்வரன் இரஞ்சிதபூசனி

திதி: சதுர்த்தசி

"பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு" எனப் பெற்றீரே
உற்றதுணை நிலவின்றேல் செங்கதிரோன் தன்னொளியை
பெற்றிடுவாரோ மக்கள் மனைமங்கலம் விளங்கிடுமோ!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (81499)

கணவர்,
பிள்ளைகள்.

## கலை விழா

யாழ்ப்பாணம், டிசெ.10

பாலர் கல்விக் கழகத்தின் 34 ஆவது வருடாந்தக் கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கழகத் தலைவர் இ.தவகோபால் தலைமையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் நா.வன்னியசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (இ-10)

## இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.10

சுதுமலை, இணுவில் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுதுமலை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த தில்லைநடராஜா மோகன்ராஜ் (வயது 23) என்பவர் கடந்த 5ஆம் திகதி ஆனைக்கோட்டையில் வைத்து 513ஆவது படையணி இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தியேட்டர் லேன், இணுவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னுத்துரை ரமேஸ் (வயது 24) என்பவர் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஊரெழு இராணுவத்தால் இணுவிலில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களது கைது தொடர்பாக படையினரால் 'ரிசீற்' வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10-173)

## பண்ணிசைப் போட்டி

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் அறங்காவலர் குழு திருப்பாவை ஓதுதல் பண்ணிசைப் போட்டியினை மாணவர்களிடையே நடத்தவுள்ளது.


ஆறாம் ஆண்டு தொடக்கம் 11 ஆம் ஆண்டு வரையுள்ள மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியில் திருப்பாவை முதல் 10 பாடல்கள் இசையுடன் பாடப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் கோயிலில் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறவுள்ள இப்போட்டிக்கு எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதிக்கு முன்னர் அறங்காவலர் குழுவுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-173)

## பயிற்சிப் பாசறை

உளவளத்துணையாளரின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான மூன்று நாள் பயிற்சிப் பாசறை இணுவில் மக் கிலியாட் வைத்தியசாலையில் நடைபெறுகின்றது. நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த உளவியலாளரும் உளச் சிகிச்சையாளருமான கூஸ் வான் டீ வீர் என்பவரால் இப்பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. இப்பயிற்சி முகாமில் 25 உளவளத்துணையாளர்கள் பங்கேற்றுள்ளார்கள். (இ-86)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 - 03 - 1956

உதிர்வு 22 - 11 - 1999

## அமரர்
## கந்தன் நவரட்ணசாமி(ராசு)

திதி: 10-12-2000

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் தலைவனாய்,
இருந்தும், எம் உயர்வுக்காய் உழைத்து
நல்வாழ்வு வாழ வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் ஓடி மறைந்து ஓராண்டு சென்றாலும்
எங்கள் மனதில் வீற்றிருப்பீர் பல ஆண்டு காலம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

*முதலாம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (81493)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## செல்லத்துரை பொன்னம்மா

தோற்றம் 25-09-1928

மறைவு 10-11-2000

தென்அளவையூரைப் பிறப்பிடமாகவும் தென்தாவடியூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி மயில்வாகனம் (புகையிரத திணைக்களம் சிங்கப்பூர்) அவர்களின் ஏகபுத்திரியும் அமரர் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியுமான பொன்னம்மா எனும் பொறையை பூதலத்தில் இன்னும் காண்போமோ - மன்னு இறைபதம் எய்திவிட்டீர் எமை விட்டு குறை ஏதும் இல்லா குலவிளக்கே!

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (10-12-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*செ.வரதராஜேஸ்வரன்,*
*ஐந்து வேம்படி,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.* (81489)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# திருமண வாழ்த்து

இன்று (10-12-2000) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் திருமண வாழ்வில் இணையும்

மணமகள்
*மகாலிங்கம்*
*தவமதி*
செருக்கப்புலம், சுழிபுரம்.



மணமகன்
*தவராஜசிங்கம்*
*தவறூபன்*
அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தம்பதியினரை அம்பாளின் அருள் பெற்று சீருஞ் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பண்டத்தரிப்பு (81377)

தவராஜசிங்கம்
குடும்பத்தினர்.

வலி. மேற்குப் பிரதேச செயலகத்தில்

# பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெற விண்ணப்பப் படிவங்கள் ஏற்பு

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

யாழ். மாவட்ட மேலதிக பதிவாளரின் அறிவுறுத்தலுக்கிணங்கவும் பொதுமக்கள் யாழ். செயலகத்துக்கு அலைந்து திரிவதைத் தவிர்ப்பதற்காகவும் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளிடமிருந்து பெறப்பட்டு யாழ். மாவட்ட மேலதிக பதிவாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுகின்றன. மேலதிக பதிவாளரின் அலுவலகத்தில் இருந்து விண்ணப்பதாரிகளுக்குதபால் மூலம் சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து 3 ரூபா 50 சதம் முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரி எழுதப்பட்டதபால் உறையையும் விண்ணப்பத்துடன் ஒப்படைக்க வேண்டும் என்று பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

(ஐ-175)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுவில் கமநல கேந்திர நிலைய
பெரும்பாக உத்தியோகத்தர்

**உயர்திரு. பொன். குகநாதன்** B Sc.

அவர்கள்
சமாதான நீதிவானாக
இன்று பாராட்டு விழாக்காணும் வேளை

பண்ணிய பயிரில் புண்ணியம் காண்பது போல்
பாரினில் மனித விழுமியங்கள் பாங்குடன் வளர
பண்ணுமொப்பற்ற பயனுறு சேவை தனில்
எண்ணங்கள் அனைத்தும் சேவையாய்
மிளிர வாழ்க.

இ. வல்லிபுரம் ஜே. பி.
செயலாளர்

மானி. வடக்கு
விவசாய சம்மேளனம்

(சி/14226)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

ஜனசக்தி சனசமூக நிலையத்தின்
ஆதரவில்
விழிப்புலன் வலுவிழந்தோர் செயற்பாட்டிற்காக
ஏற்பாடு செய்யப்பட்ட படக்காட்சி காண்பிக்கப்படும்.

விஜய், சிம்ரான் நடித்த

**பிரியமானவளே**

(திரைப்படக் கூட்டுத்தாபன ரீல்ஸ் அல்ல)

நேரம்: 11-00. 2-30 மணி (பு.நே)

காலம்: 10-12-2000 (இன்று) (81519)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, டிசெ. 10

கொக்குவில் சுற்புலந்து அருள் மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் திருக்கார்த்திகைத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

சுவாமி வெளி வீதி வலம் வந்து சொக்கப்பானை எரித்தல் நிகழ்வு இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள் மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் கோயிலில் இன்று ஞாயிற்று கிழமை மாலை 4.30 மணிக்கு திருக்கார்த்திகைத் திருவிழா நடைபெறும்.

சுவாமி வீதி வலம் வந்து சொக்கப்பானை எரித்தல் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான ஸ்ரீ விநாயகர் பவனி எதிர்வரும் வியாழன் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட 20 அடி உயர ஸ்ரீ விநாயகன் உருவ பவனி நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் வழக்கம்பரை முத்துமாரி ஆலயங்களுக்குச் சென்று மீண்டும் சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்துக்குத் திரும்பும்.

(ஐ-175)

★ ★ ★

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி பிள்ளையார்கோயில், சிவன்கோயில் ஆகியவற்றில் கார்த்திகை திப உற்சவ விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.

ஆலயத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அடியார்கள் செல்வதற்குஇராணுவத்தினர் கட்டுப்படுத்தி உள்ளமையால் ஆலயத்துக்குச் செல்ல விரும்பும் அடியார்களைக் காலை 10 மணிக்கு முன்பாக தெல்லிப்பழை தடை முகாமுக்கு சமுகம் தரும்படி அறங்காவலர் சபையினர் கோரியுள்ளனர்.

(இ-86)

வலி. மேற்கில் வீடு சேதமடைந்த

# 219 குடும்பங்களுக்கு முதல் கட்ட கொடுப்பனவு

வலிகாமம் மேற்கு, டிசெ. 10

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் யுத்த நிலைமை காரணமாக வீடுகள் சேதமடைந்தவர்களில் மாத வருமானம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட 219 குடும்பங்களுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் பிரதேச செயலகத்தினால் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு நன்கொடையாக 25 ஆயிரம் ரூபாவை கட்டம் கட்டமாக வழங்கிவருகின்றது.

இத்திட்டத்திலேயே 219 குடும்பங்களுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவழங்கப்படவுள்ளது. கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக கொடுப்பனவு வழங்கப்படவுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

அராலி மேற்கு — 14, அராலி மத்தி — 21, அராலி தெற்கு— 25, அராலி வடக்கு —23, வட்டுத்தெற்கு — 20, வட்டுத் தென்மேற்கு—1, சுளிபுரம் மேற்கு— 20, பண்ணாகம்—39, சங்கானை கிழக்கு கப்பண்டா முகாம்—56 குடும்பங்கள். (ஐ-175)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பி செல்லம்மா

(ஓய்வு பெற்ற ஆசிரியை, அச்சுவேலி ம. வி.)

காலஞ்சென்ற செ. சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவி செல்லம்மா 9-12-2000 அன்று காலமானார்.

இவர் சத்தியேஸ்வரி, ஞானேஸ்வரி, செல்வகுலேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராசா (கணக்காளர், கொழும்பு), தாமோதரன் (ஆசிரியர், அச்சுவேலி சரஸ்வதிவித்தியாலயம்), நாகேஸ்வரி (கனடா), சிவபாலன் (கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும் பாலகணேஸ் (கனடா), பாலகுமார், பாலசதீஸ், லினுஜா, பிரதாபன், காயத்திரி, கபிலன், அர்ச்சுன், சாரண்யா, காருண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சின்னம்மா, பொன்னம்மா, தங்கம்மா, கிருஷ்ணர் (கணக்காளர், வீரகேசரி -கொழும்பு) தனிகாசலம், இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (10-12-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11—00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் இடைக்காடு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. செல்வகுலேஸ்வரன்
(மகன்)

இடைக்காடு,
அச்சுவேலி.

(81525)

### கார்த்திகேசு நாகமணி (பாலாப்பா)

(இளைப்பாறிய C. W. E. உத்தியோகத்தர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை சுவாமியார் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் பாலாப்பா என அன்பாக அழைக்கப்படுபவருமாகிய கார்த்திகேசு நாகமணி அவர்கள் நேற்று சனிக்கிழமை (9-12-2000) அதிகாலை 3 மணி அளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற (பாலாம்மா) முத்துக்குட்டியின் அன்புக் கணவரும், பாலனின் (பால சுப்பிரமணியம்) (கனடா) அன்புத் தந்தையாரும், சுகந்தியின் அன்பு மாமனாரும் நிசாந்தன், நிரு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
M. மோகன்

தற்காலிக முகவரி
74/1, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(81522)

## திருமண வாழ்த்து

செ. தர்மராஜா
தம்பதிகளின் புதல்வன்
திருநிறை செல்வன்
**தருமசொரூபன் [குகன்]**

பா. லிங்கநாதன்
(வசந்தம்—வசந்தா பாமசி)
தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**ராஜினி**

இன்று (10-12-2000) ஞாயிற்றுக்கிழமை திருமணபந்தத்தில் இணைகிறார்கள். தம்பதிகள் சகல செல்வங்களும் பெற்று நீடுவாழ வாழ்த்துவதோடு உறவினர்கள், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

வெஸ்கோ+
யாழ் வைத்தியசாலை.

லயன் க. மு. பத்மநாதன் குடும்பம்
வெஸ்கோ ஸ்தாபனத்தின்
ஊழியர்கள்

(81520)

## சோழியபுரம் சோழேச்சரர் ஆலய தீபஸ்தாபனம்

காலம்; **10-12-2000** நேரம்: **பிற்பகல் 4. 00 - 5. 00 மணி**

தீபஸ்தாபனம் செய்பவர்:-

**செல்வன் பிறைசூடிக்குரு சோழராஜன்**

[யாழ் இந்துக் கல்லூரி ஆண்டு 6 மாணவன்]

இரவு 7 00 மணியளவில்:

கூடிய சமாதானம் குலையாது காக்க இறையருள் வேண்டி விடிவிளக்குகள் - 108 ஏற்றி வைக்கப்படும்.

**சோழியூரான் - பிறைசூடிக்குரு.**

சோழேச்சரம், சோழியபுரம், சுழிபுரம்.

(81501)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தெய்வீக ஒளியே தர்மத்தைக் காக்க சண்முக வடிவமாக உருவெடுத்தது

சைவம் மனித வாழ்வை வளம் படுத்தும் வகையில் அன்பு நெறிப் பட்ட பல்வகை வழிபாட்டு முறைக ளையும் கொண்டிருப்பது சைவ வழி பாடு பற்றி ஆராய்பவர்க்குப் புலனா கும். சைவ வழிபாடு என்பது அடிப் படையில் அகம் சார்ந்தது. அகத் தைப் புனிதப்படுத்தி ஒழுங்கு படுத்



துவதன் மூலம் மனிதன் படிப்படியா கப் பிரபஞ்ச யதார்த்தத்தை தரி சிக்க முடிகின்றது. அதாவது அக இருள் நீங்க, அகந்தை கெட தெய் வீக ஒழியைத் தனக்குள்ளே கண்டு தானே தெய்வமாகின்றான். இத்த கைய பேருண்மையை அடிப்படை யாகக் கொண்டு தோற்றம் பெற்றதே தீபத் திருநாள். நம் உடலிற்படியும் அழுக்குகளை நீராடிப் போக்கிக் கொள்வது போல, நமது உள்ளத் தைப் பற்றியுள்ள பல்வகை மாசு களையும் இறை வழிபாட்டின் மூலம் நாம் போக்கி மகிழ்வுடன் வாழலாம். உடலுக்கு நேரும் பிணிகளை மருந் துண்டு தீர்த்துக் கொள்வதுபோன்று உயிரைப் பற்றியுள்ள மலப் பிணி களை வழிபாட்டின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம். இருளிலிருந்து ஒளிக் கும், சாவினின்று சாவாமைக்கும், பொய் மையினின்று மெய்மைக்கும் என்னை அழைத்துச் செல்வாயாக என பிருக தாரணியக உபநிடதம் கூறுங் கருத் தையே தீபத் திருநாளாகிய கார்த் திகை விளக்கீடு புலப்படுத்துகின்றது.

கார்த்திகை நட்சத்திரத்துடன் சந்திரன் கூடி நிற்கும் காலம் கார்த் திகை எனப்படும். சூரபத்மனால் இடர்பட்ட தேவர்களை உய்விக்கும் பொருட்டு சிவபிரானுடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய ஆறு தீப்பொறிகளும் சிவபிரானின் ஆணை யினால் வாயுவினாலும் அக்கினியினா லும் சரவணப் பொய்கையிற் சேர்க் கப்பட்டு அவை ஆறு குழந்தைகளா யின அக் குழந்தைகளை கார்த்தி கைப் பெண்கள் பாராட்டி வளர்த்து வரும் காலை, அவ்விடத்தின் சிவ னும் உமையும் தோன்றி உமை ஆறு உருவங்களையும் ஒன்றாகச் சேர்த்து தழுவியமையால் ஆறு முகன் தோன்றினான். கார்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமையி னால் கார்த்திகேயன் என்ற திரு நாமம் பெற்றவன் ஆறுமுகன். ஒளி வடிவினனாகிய கார்திகேயனை கார்த் திகைப் பெண்கள் ஆறுமுகப்பெரு மானாகக் கண்டு வழிபட்ட தினமே கார்த்திகையில்வரும் கார்த்திகை நாளாகவும், எனவேதான் திருக்கார்த திகை என வழங்கப்படுவதாகவும்




அறியப்படுகின்றது. தெய்வீக ஒளி தர்மத்தைக் காக்க எடுத்த வடிவே சண்முக வடிவம். இத் தினத்தில் குமரப்பெருமான் வீற்றிருக்கும் ஆல யங்கள் எல்லாம் குமராலயதீபம் என்னும் தீபோட்சவமும், திருக்கார்த திகை விரதமும் அனுட்டிக்கப்படு கின்றன.

அசுரகுலத் தலைவனாகிய மகா பலிச் சக்கரவர்த்தி தானதருமங் கள் இயற்றும் இயல்புடையவன். எனினும், அவன் அசுர குலத்தவனாக இருந்தபடியால் தேவர்களுக்குப் பாதகமாகவே ஆட்சிசெய்து வந்தான். அவன் தேவ உலகைக் கைப்பற்றும நோக்கில் ஒரு யாகம் செய்துகொண் டிருந்தான். இந் நிலையில் விஷ்ணு ஆனவர் தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டு ஒரு வாமன வடிவம் எடுத்து மகாபலி சக்கரவர்த்தியின் முன் சென்று, தான் தவஞ்செய்வதற்கு மூன்றடி நிலம் தரும்படி கேட்டார். தானதருமங்களில் விருப்புடையவ னாகிய மகாபலி, விஷ்ணு விரும்பிய படியே மூவடியையும் பெற்றுக் கொள்ளும்படி கூறவும் விஷ்ணு விஷ் வரூபம் எடுத்து சுவர்க்கம், பாதாளம் ஆலய உலகினைத் தமது ஈரடிக ளாலும் அளந்து மூன்றாம் அடிக்கு இடமில்லாமற் போகவே மகாபலியின சிரசிற் பாதத்தை வைத்தார். அத னால் மகாபலி வாழ்வு அழிந்தது. கார்த்திகை மாதத்துப் பூரணையில் இந் நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் விஷ்ணு அசுரத் தலைவனை அழித் துத் தேவர்களை உய்வித்தமையால இந் நாளை மகாவிஷ்ணுவை வழி படும் நாளாக, விஷ்ணு ஆலயங்க ளின் உற்சவமாக 'விஷ்ணு ஆலய தீபம்' இடம்பெறுகின்றது.

பிரம விட்டுணுக்கள் அகந்தை யால் யார் பெரியவர் எனத் தம்முட் பிணக்குற்றவேளை பேரொளி வடி வம் தோன்றியமையும் அதன் அடி முடியைத் தேடும் முயற்சியில் பிரம்மா

திருமதி
நாச்சியார் செல்வநாயகம்
தலைவர், நுண்கலைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

அன்னப்பட்சியாக முடியையும், விஷ்ணு பன்றியாக அடியையும் தேடி அலைந்து காண முடியாமல் ஈற்றில் தம் அகந் தையை உணர்ந்து தம்மிற் பெரிய பரம்பொருள் ஒளி வடிவாய் இருப் பதை அறிந்து வழிபட்டனர். இந் நாள்தான் சிவராத்திரி எனவும் இவ் வடிவத்தைத் தமக்கு என்றும் காட்டி யருள வேண்டுமென்று பரமவிஷ் ணுக்கள் இறைஞ்ச இறைவன் திருக கார்த்திகை நாளில் மீண்டும் இவ்வு ருவைக் காட்டுவேன் எனக் கார்த்தி கைப் பௌர்ணமியிற் காட்டியதால் இந் நாளில் எல்லா ஆலயங்களிலும, வீடுகளிலும் சர்வாலய தீப உற்சவம் கொண்டாடப்படுவதாக அறியக்கிடக் கின்றது.

தீபம் என்பது இறைவனது திரு வருட் பிரகாசத்தைக் காட்டுவது. இருளை நீக்குவது ஒளி. அதே போன்று நம் அறியாமையை, அகந் தையை நீக்குவது இறையருள் ஒன்றே. அருள் வழியில் நாம் செயற்படும் போதே உண்மையைத் தரிசிக்க முடிகின்றது. இறைவன் திரிபுரசம் ஹாரம் செய்த தினம் கார்த்திகை மாதக் கார்த்திகையாகவும் இறைவ னின் புன்னகையே அக்கினியாகத் தோன்றி திரிபுரங்களை எரித்தமை யைக் காட்டவே தீபோட்சவம் கொண் டாடப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு கார்த்தகைத் தீபத்தின் பல்வேறுபட்ட வரலாறுகளும் நாம் அகந்தையை நீக்கினாலன்றி, இறைய ருளைப் பெறமுடியாது என்பதையும் உலகை ஒளிரச் செய்யும் சத்ய வஸ்து நம்மை நாம் அருள் வழி யில் நடத்தும் போது நம்மை ஒளிரச் செய்கின்றமையையும் எடுத்துக்காட்டு கின்றது.

## மலை உச்சியில் தீபம்

கார்த்திகைத் தீப நாளில் திரு வண்ணாமலைத் தலத்திலே மலை உச்சியிலே பெருந் தீபமேற்றப்படு கின்றது. இறைவனின் தூய சோதி வடிவை நினைவு கூரும் வகையிலும அதனை வழிபட்டு உய்யும் வகை யிலும் இத் தீபம் பண்டைக்காலம் தொடக்கம் ஏற்றப்பட்டு வருகின்ற மையை பண்டைய தமிழ் நூல்க ளின் மூலம் அறியக் கிடக்கிறது.

சைவமக்கள் வாழ்க்கையில் விளக்கீடு பெரிதும் போற்றப்பட்டு வருவதொன்றாகும். சர்வாலய தீபம் என்ற வகையில் அனைத்துக் கோயில் களிலும் வீடுகளிலும் தீபங்கள் ஏற் றப்படுகின்றன. ஏகதீபம் முதல் இலட்சதீபம் வரை ஏற்றியும், நெய் விளக்கிட்டும் எல்லாவற்றிற்கும் மேலாக மாவிளக்கேற்றியும் வழிபடுகின்றனர். சிலர் இந்நாளில் காவடி எடுப்பர்.

## மா விளக்கு

தீபத் திருநாள் நிகழ்ச்சியில் மிக வும் பக்தி பூர்வமாகச் செய்யப்படும் நிகழ்வு மாவிளக்கு. செந்தினைமா [illegible]



அரிசி மாவுடன் தேனையும் சர்க்க ரையையும் சேர்த்துப் பிசைந்து அம் மாவினால் அகல் விளக்கு வடிவத் தில் செய்து, திரியும் இட்டு, நெய்யும் இட்டு தீபமாக ஏற்றும் முறையே மாவிளக்குத் தீபமாகும். தினைப் புலத்தில் செந்தினை மாவில் தேனைக் கலந்து தகழிசெய்து தாமரைத்தண்டு, நூல் திரிமூலம் பசு வின் நெய் நிறைக்கப்பட்ட மாவிளக குத் தீபம்மூலம் வள்ளிநாயகி முருக னைத் தரிசித்ததாகவும் அதனால், முருகனுக்கே சமர்ப்பித்து முருகனு டன் இரண்டறக் கலந்ததாகவும் கந் தனுடைய புராண வரலாறு மூலம் அறியக் கிடக்கின்றது.

வள்ளிநாயகி மாவிளக்கேற்றி அந்த ஒளியில் கந்தப்பெருமானைத் தரிசித்து அப் பரம்பொருளுடன இரண டறக் கலந்தமையை எண்ணித் தமக் கும் முருகனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என்ற நிலை யில் மாவிளக்கு வழிபாடு மக்களி டையே செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும். மேலும், நெய் விளக்கேற் றும் வழக்கமும் உண்டு.

## சொக்கப்பானை

திருக்கார்த்திகையில் ஆலயங்க ளில் இடம்பெறும் பெரும் நிகழ்வு சொக்கப்பானை கொழுத்துதல் ஆகும். வடமொழியிற் சுஷ்க - பர்ண என் பது காய்ந்த இலை எனப் பொருள் படும். தென்னை, பனை, மூங்கில், சண்பகம், வில்வம், வாழை முத லிய மரங்களில் ஒன்றைக் கோயில் முன்வாசலில் நட்டு அதனைத் தென்னை, பனை, கமுகு, வாழை முத லியவைகளின் காய்ந்த சருகுகளால் வட்டமாக வளைத்துக் கட்டியிருப்பர். சுவாமியை விழாச்செய்து எழுந்தரு ளப் பண்ணி சொக்கப்பானைக்கு முன் நிறுத்தி அதைச் சிவமாகப் பாவித்து முதல் நாள் சாயங்காலம் சிவாக்கினி உண்டாக்கி ஒன்பது தகழிகளிலும் வைக்கப்பட்டிருக்கும். ஒரு தகழியை அதன் உச்சியிலும் ஏனைய எட்டுத் தகழிகளையும் எட் டுத் திக்கிலும் வைப்பர். தகழிகளில் உள்ள நெருப்பு, சருகுகளிற் பிடித்து பெருஞ்சோதியாய் எரியும். உலர்ந்த இலைகளைக் கொண்டு பேரொழியை ஏற்படுத்தும் நிகழ்வு சுஷ்கபர்ண மருவிச் சொக்கப்பானையாயிற்று. அஞ்ஞானத்தையும், அகங்காரத்தை யும் ஞானத்தின் பலிபீடத்தில் பலி கொடுத்து அங்கே தர்மத்தை ஸ்தாபி என்பதே வேதங்கள் போதிக்கும் உண்மை. "வேதோ கிலோ தர்ம மூலம்" என்பது ஞானிகளினுடைய அனுபவ சித்தாந்தம். இவ்வகையில் அஞ்ஞான இருள் நீக்க மெய்யொளி பெறும் தாற்பரியத்தையே கார்த்தி கைத் தீபம் எடுத்தியம்புகின்றது.※

# இந்தியாவே, இந்தியாவே! நொந்துபோனோம் இந்தியாவே!!

இலங்கை பிரிக்கப்பட்டு, தமிழீழம் உருவாக்கப்படு வதை இந்தியா ஆதரிக்காது; ஆனால், அங்குள்ள தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் அனைத்தும் வழங்கப்படவேண்டும் என்பதில் அது உறுதியாகவே இருக்கின்றது –

இது - இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை சம்பந்த மான தன் நிலைப்பாட்டைப்பற்றி இந்தியா அடிக்கடி கூறிவரும் கருத்து!

இங்குள்ள தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள், கஷ்டங் கள், தேவைகள் பல உண்டு என்பதை முதன்முதலில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட அரசாங்கம் எமது அரசாங் கமே. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவை அனைத்தையும் தீர்த்து வைப்பதே இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும் –

இது -இலங்கை ஜனாதிபதியும் அரசின் கொள்கை வகுப்புக் குழுவைச் சேர்ந்த முக்கியமான அமைச்சர் களும் சமீபகாலமாக அடிக்கடி கூறிவரும் கருத்து!

இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படல் வேண்டும். இனப்பிரச்சினை முற்றுமுழுதாகத் தீர்க்கப்பட் டுப் போரும் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் –

இது - அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, சீனா, ஜப்பான் போன்ற வல்லரசுகளும் அவுஸ்திரேலியா, தென்னா பிரிக்கா, கனடா போன்ற சமாதான விரும்பிகளும் அடிக்கடி கூறத்தொடங்கியுள்ள கருத்து!

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அநீதிகள், அழிவுகள் நிறுத்தப்பட வேண்டும்; அவர்களின் உரிமை கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் –

இது - பரிசுத்த பாப்பரசர், ஐநா.செயலாளர், நெல்சன் மண்டேலா போன்ற கண்ணியம் மிக்க கனவான்கள் கூறிவரும் கருத்து!

தமிழீழத்துக்கு மாற்றாக, தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வுத்திட் டத்தை அரசு முன்வைத்தால் அதை நன்கு பரிசீலனை செய்வோம்; பொருத்தமாகவும் திருப்தியாகவும் இருந் தால், அதை ஏற்றுக்கொள்வோம் –

இது - இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை என நினைத்து, வாய்மூடி மௌனி களாய் ஒதுங்கியிருந்த பல்வேறு நாடுகளின் தலைவர்க ளும் பிரமுகர்களும் மேற்போந்த ஆரோக்கியமான கருத் துக்களைப் பகிரங்கமாக வெளியிடத் தூண்டும் வகை யில், இந்தப் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்துவ தில் வெற்றிகண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்து!

இவை அனைத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் –

இலங்கைத் தமிழ் மக்களுடைய நியாயமான உரி மைகள் அனைத்தும் சட்டரீதியாக உறுதி செய்யப்படல் வேண்டும்; அநியாய அழிவுக்குக் காரணமான போர் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் என்பதில் நியா யமான கருத்தொற்றுமை இருப்பதைக் காணலாம்.

இலங்கை அரசின் போர்க் கரங்களைத் தொடர்ந்தும் வலுப்படுத்திக்கொண்டு வருவதன்மூலம் தம் சொற்களிற் "பளிச்"சிட்ட நம்பிக்கை ஒளியைத் தம் செயல் "மேகங்க"ளால் சில வல்லரசுகள் மறைத்துக் கொண்டு வருவதையும் பொருட்படுத்தாமல் –

ஏற்கெனவே சில சமாதான முயற்சிகளில் வெற்றி கண்ட நோர்வே –

"நன்றே செய்; அதனை இன்றே செய்; அதையும் இன்னே செய்" என்பதில் நம்பிக்கைகொண்ட நோர்வே –

பூனைக்கு மணி கட்டும் முயற்சியாக அல்லாமல், பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கும் பணியாக இந்தப் பிரச்சினைத் தீர்வில் அந்தரங்க சுத்தியுடன் ஈடுபட்டு ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது!

ஆனால் –

அன்னை நாடான இந்தியாவே சில "சண்டித்தனங்"களில் ஈடுபடத் தொடங்கிவிட்டது!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகர னுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் மட்டுமே இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காணமுடி யும் என இலங்கைத் தலைவர்களும் உலகத் தலை வர்களும் தெளிவாகக் கூறியுள்ளதை உணர்ந்திருந் தும் –

இதே கருத்தை இந்தியாவிலுள்ள தலைவர்கள் பலரும் பல சந்தர்ப்பங்களிற் கூறியுள்ளதைத் தெரிந்து கொண்டும் –

பிரபாகரனைக் கைதுசெய்து இந்தியாவுக்குக் கொண்டுவந்து விசாரிப்பது சம்பந்தமாக இந்தியா உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி சமீபத்தில் முழங்கியிருப்பதும் –

இந்த விஷயத்தில் 'இன்ரர்போல்' என்னும் சர்வ தேசக் காவல் துறையின் உதவியை இந்தியா கோரி இருப்பதும் –

நவீன வசதிகள் கொண்ட பாரிய போர்க்கப்பல் ஒன்றை இலங்கை அரசுக்கு விற்றிருப்பதும் –

சில உலங்குவானூர்திகளை இலவசமாகவே வழங்கியிருப்பதும் –

## மணிமண்டபம்

தமிழ்மக்களை அதிர்ச்சிக்கும் கவலைக்கும் மட்டு மல்லாமல், அச்சத்திற்கும் அவநம்பிக்கைக்கும் உள் ளாக்கி விட்டன!

இந்தியாவின் உள்நோக்கம் வேறாக இருக்கலாம்! பெற்றோரின் கவனத்தை தன்பால் ஈர்ப்பதற்காக – புறக்கணிக்கப்பட்ட ஒரு குழந்தை செய்யும் "குழப் படி"யை ஒத்த இராஜதந்திரமாக அது இருக்கலாம்!

ஆனால் –

இதை ஒரு இராஜதந்திரமாக அல்லாமல் "இராட் சத"தந்திரமாகவே இலங்கைத் தமிழர்கள் கருது கின்றார்கள்!

எந்த நாட்டைத் தம் "சொந்தங்கள்" நிறைந்த நாடாக –

ஆன்மீக, கலாசாரப் பிணைப்புக்களால் தம் நெஞ் சுக்கு நெருங்கிய நாடாக –

ஆபத்தும் அழிவுகளும் ஏற்படும் வேளைகளில் அன்புக் கரங்களால் தம்மை அணைத்தபடி, இரும்புக் கரத்தால் எதிரிகளை இடறிவிடும் நாடாக –

இலங்கைத் தமிழர்கள் கருதி வருகின்றார்களோ –

அந்த இந்தியாவே, ஏற்கனவே நொந்துபோன தமிழர்களை மேலும் வெந்துபோகச் செய்யும் செயல் களில் ஈடுபடும் பொழுது –

இதிகாச நாயகன் இராமச்சந்திரமூர்த்தியின் கோதண்டத்தால் நசிக்கப்பட்டு அலறிய தேரையின் கூற்றுத்தான் நினைவுக்கு வருகின்றது –

"வேறு யாராவது என்னை வருத்தினால், இறைவ னாகிய உன்னிடம் முறையிடலாம்! இறைவனாகிய நீயே உன் கோதண்டத்தை என்மேல் வைத்திருக்கும்போது நான் யாரிடம் முறையிடுவது?" - என்பதே அக்கூற்றாகும்

எனினும் –

வெண்ணெய் திரண்டுவரும்போது தாழியை உடைக்க முயலாமல் –

தேரிழுக்கும் முயற்சிகள் நடக்கும் இவ்வேளை யில் இந்தியாவும் வடத்தைப் பிடிப்பது - எல்லோருக கும் நன்மை தரும்.

- சித்தன்.

SAAHE அழகு நிலையம்
※ மணப்பெண் அலங்காரம் ※ புகைப்படம் VIDEO
※ மண்டபம் ※ மணவறை
※ கேக் ஓடர்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு:506385.
No.1, vaverset Place, Colombo - 06.
(C/14128)

# இந்த வார இராசி பலன்

## 10.12.2000 - 16.12.2000

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா சந் | ரா |
| | இராசிச்சக்கரம் | | |
| வெள் | | | |
| கே | சூ ▲ புத | | செவ் |

***மாற்றம்:***

*10.12.2000இல் கார்த்திகை - சந்திரன் இடபம் இராசியில் நிற்கும்.*

*14.12.2000இல் தனுசு இராசியில் புதன் மாறும்.*

உருக்குலைந்த மனித உடலை உருவமாக்கி, உயிரூட்டுவது போன்றது இணப்பிரச்சினை. ஆனால் அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். அதேபோன்ற செயற்பாடுகளை ஐ.நா. அங்கத்துவ நாடுகள் செய்து பார்க்கின்றன. சாம, பேத, தான, தண்டம் என்ற சாணக்கிய விளையாட்டு 2001 இல் வெற்றி தர இடமுண்டு. விடிவை நோக்கி மக்கள் மனங்கள் அலைபாயும். ஆயினும் அடுப்பு எரிவதற்கு முன்பு புகைகக்குவது போன்ற செயற்பாடுகள் இல்லாமல் இருக்காது. இந்தியாவில் உள்நாட்டு அரசியல் வாதிகளின் பிரச்சினைகள் தலைதூக்கும். மேற்கு உலகம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு புதிய அழுத்தங்களைக் கொடுக்கும் என கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

நாம் வாழும் காலம் கொம்பியூட்டர் காலம். பழமையில், புதுமை காண வேண்டும். சாத்திர நுட்பங்களை விஞ்ஞான ரீதியில் நிரூபித்து எமது இளம் சந்ததியினருக்கு உண்மைகளை உணர்த்த வேண்டும். மெஞ்ஞானத்தில் ஒரு பகுதி விஞ்ஞான சாஸ்திரமாகும்.

ஜோதியாகிய இறைவனிடம் இருந்துவந்த சக்தியால் பூமியிலுள்ள- பிரபஞ்சத்திலுள்ள- உயிர்களுக்கு என்ன செயற்பாடுவரும் என்பதை அறியக்கூடிய ஒரு கலையே ஜோதிடம் அல்லது சோதிடமாகும். எனவே

## மகாதேவா ஜோதிடம்

உங்களுக்குப் பொருத்தமான தொழில் செய்து முன்னேற முயலுவீர்கள். சோதிடத்தின் ஆலோசனைப்படி தொழில் முறையில் இலாபம் காண வழி தேடுங்கள். நன்மைகள் அடைவீர்கள். புதிய நண்பர்கள் உதவிகள்செய்வார்கள். தடுமாறாமல், கெட்ட சகவாசத்தை விலக்கி நடக்கவும். நாரி நோ, வாய்வுச் சேட்டை, மூக்கடைப்பு, உடல்சூடு என்பன வரும். இஞ்சி பாவிக்கவும். பாதுகாப்புத்துறை, எண்ணெய்த் துறை, நிர்வாகத்துறை, ஒப்பந்தத் துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், புதன், வியாழன், சனி.*

### இடபம்

ஒரு வருஷத்தில் ஒரே குடும்பச் சகோதரர்களுக்கு திருமணம் செய்ய முடியுமா? இது மக்கள் கேள்வி. ஒருபந்தலில் ஒரு நாளில் இரு சகோதரர்களுக்கு 24 மணித்தியாலத்துக்குள் சுபமுகூர்த்தங்களில் செய்யலாம். அல்லது ஒருவருக்குத் தாலி கட்டிய பின்பு மூன்று மாதம் கழித்து மற்றைய சகோதரத்துக்கு திருமணம் செய்யலாம்.

ஒரு குடும்பத்தில் ஒரு இறப்பு வந்தாலும் இதே விதியைக் கடைப்பிடிக்கலாம். வீடுமனை சம்பந்தமான மாற்றங்கள் வரும். தொழில் ஸ்தானத்தில் புதியதிட்டங்களால் பணவரவு ஏற்படும். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். அடிக்கடி ஏதாவது ஒரு பொதுத் தொண்டு விஷயமாக ஓடியாடித்திரிவீர்கள். தொண்டை வருத்தம், வாய்வுத் தொல்லைகள் என்பன வர இடமுண்டு. பால், முட்டை சாப்பாட்டில் சேர்த்து வாருங்கள். பலசரக்கு வியாபாரம், இசைத்துறை ரீ.வி.துறை, தோட்டத்துறை, சட்டத்துறை, மருத்துவத்துறை போன்ற துறையில் தொடர்புள்ளவர்கள் அதிக இலாபங்கள் அடைவீர்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், புதன், வியாழன், சனி.*

### மிதுனம்

ஏட்டில் சாத்திரம் இருந்து என்ன பயன்? மனித பாத்திரத்தில் நடைமுறைப்படுத்தி, நன்மைகளை அடைய முடிகின்றதா என நாம் பார்க்கவேண்டும். நீங்கள் பொருத்தமான தொழிலில் அழுத்தம், புகழ், பொருள் பெற முயற்சி செய்தபடி இருப்பீர்கள். அடிக்கடி குறும்பு வேலை செய்து எதிர்ப்பாலாரிடம் ஏச்சு வாங்குவீர்கள். போட்டிகளில வெற்றி அடைவீர்கள். பொதுத் தொண்டுகள் செய்வீர்கள். அதிக வேலை, அதனால் களைப்பு வரலாம். முதுகுவலி, தலைவலி, உரசல்காயங்கள், வாய்வுத் தொல்லை என்பன வர இடமுண்டு. மல்லி, தேன், கஜு, முந்திரிகை வற்றல் என்பன சாப்பாட்டில் சேர்த்துக் கொள்வது நன்று. இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்வது நன்று. ஆடை ஆபரணச் செலவுகள் வர இடமுண்டு. நீதித்துறை, ஆசிரியத் துறை, வியாபாரத்துறை, கோவில்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்- திங்கள், புதன், வியாழன், சனி.*

### கடகம்

இளையபிள்ளையின் குறிப்புப் பலன் மட்டும் பார்த்தால் நல்லதா? எந்தப்பிள்ளையாக இருந்தாலும் பரவாயில்லை. பெற்றோரின் பலனுடன் சேர்த்துப் பார்ப்பது நல்லது. அதனால் உங்கள் தொழில் வளம் மென்மேலும் சிறக்க பல உயர் அழுத்தங்கள், ஆக்கங்களைத் தேட வாய்ப்புக்களைச் சிந்திப்பீர்கள். அடிக்கடி ஏன் பதற்றப்படுகின்றீர்கள். தேவையற்ற விதண்டாவாதங்களை விட்டுவிடுங்கள். வசதிகள் தேடி வரும் காலமாகும். நல்லவர்கள் உதவிசெய்வார்கள். இடமாற்ற யோசனை அடிக்கடி வந்தாலும் இடம் மாறாமல் இருப்பது நன்று. அடிக்கடி கலைத்துறை, தெய்வ வழிபாட்டு இடங்களில் உங்களைக் காணலாம். வயிற்றுவலி, மலச்சிக்கல், வாய்வுவருத்தங்கள் என்பன வரும். கோவில்துறைகளில் ஈடுபாடு வரும். வியாபாரம், எண்ணெய் வியாபாரம், தபால்தந்தி, செய்திப் பகுதிகளில் வேலை, ஹோட்டல் துறை போன்றவர்களுக்கு வருமானச் சிறப்புக் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வியாழன், சனி.*

### சிங்கம்

நல்லவர்கள், நேர்மையானவர்களுக்கு முதலில் துன்பங்கள், அவமானங்கள் ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றியும், கௌரவமும் கிடைத்தே தீரும். உண்மைக்காக உழைப்பீர்கள். தெய்வத் திருப்பணி தொடரட்டும். வேஷம் போட்டு மக்களின் பணத்தைத் தன் சுயநலத்திற்காக விரயமாக்கும் ஒரு சிலரின் செயற்பாட்டைக் கண்டு கொதித்து எழுவீர்கள். பொறுமையாக இருந்து நல்லதைச் செய்து வாருங்கள். உலகில் இரட்டை வேஷம் போடுபவர்களை பிரித்தறிந்து செயற்படுங்கள். அதனால் தொழில்ஸ்தானத்தில் உங்களுக்குப் பல அன்பர்கள் நண்பர்களாக வருவார்கள். கைகால் உளைவு, சலவருத்தங்கள், சூட்டு வருத்தங்கள், கால், கைகளில் உரசல் காயங்கள் என்பன வர இடமுண்டு. கீரை வகைகளை சாப்பாட்டில் சேர்த்து வந்தால் நன்று. சட்டத்துறை, வியாபாரத்துறை, வைத்தியத்துறை, போதனைத்துறை போன்றவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன், சனி.*

### கன்னி

பிறந்த மாதம், நாள்களில் மணமக்களுக்குத் திருமணம் செய்வது கூடாதா? மணமக்களின் நட்சத்திரங்களுக்கு, எடுக்கப்படும் வளர்பிறையில் சுபபட்ஷித் திசைகளில் சுபநேரத்தில் அல்லது சுப ஹோரையில் சுபமுகூர்த்தம் நிச்சயிக்கப்படுவது சிறந்தது. இச் சந்தர்ப்பத்தில் பிறந்த நாளோ மாதமோ முக்கியமல்ல. எப்படியிருந்தாலும் நீங்கள் பணப்பெட்டி மீது ஒரு கண்ணாக இருங்கள். காசு இல்லாமல் எதுதான் நடக்கின்றது? இறந்தாலும் காசு வேண்டும். பிறந்தாலும் காசு வேண்டும்.எதற்காக அலைகின்றீர்கள்? குடும்பச் சிறப்பைப் பார்ப்பீர்கள். எதிர்ப்பாலர்கள உதவி செய்வார்கள். நல்ல நண்பர்கள் சேருவார்கள். இடுப்புவலி, வாய்வு, வாத உளைவுகள் என்பன கொடுக்கும். கிருமித் தாக்கங்கள் வரலாம். இசைத்துறை, செய்தித்துறை, கலைத்துறை, குருத்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்- புதன், வியாழன், சனி.*

### துலாம்

மது அருந்தாதவன் பிறரை மது அருந்த வேண்டாம் எனச் சொல்வதில் என்ன இருக்கின்றது? மது அருந்தி ஈரல் கரைந்து வாழ்க்கையின் சுகங்கள் இழந்து துன்பப்படுபவர் சொன்னால் அதில் நியாயம் இருக்கும் அல்லவா? எனவே கஷ்டப்பட்டு, அனுபவப்பட்டு உங்கள் முடிவுகளை தொழில் ஸ்தானத்தில் நிலைப்படுத்துவீர்கள். சித்திரை 2001 வரையும் மாற்றங்கள், பிரயாணங்கள் திடீரென ஏற்படலாம். எதற்கும் போக்குவரத்தில் கவனமாக இருக்கவும். விதியின் வழிவந்த பலன்கள் உங்களை வருத்தலாம். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து அனுமாரை வழிபடவும். பாலும்-பழமும் கொடுத்தால் நன்று. தோல் வருத்தம், தலைப்பாரம், பலவீனம், வாய்வுத் தொல்லை வரலாம். சத்தான சாப்பாடு எடுக்கவும். சீனியைக் குறைக்கவும். முட்டை, பால் சேர்த்துக் கொள்ளவும். குருத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை, கொம்பியூட்டர்துறை, இசைத்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன், வியாழன், சனி.*

### விருச்சிகம்

கசிப்பால் பணக்காரர் ஆகின்றவர்கள் சிலர். ஆனால் கசிப்பால் ஈரல் கரைந்து நடைப்பிணமாக அலைந்து திரிகின்றார்கள் பலர் இச்சமுதாயத்தில். இந் நிலையை மாற்றுவது யார்? குடும்பங்களைப் பாதிக்காமல் செயற்படுவது யார்? இச் சமுதாயச் சீரழிவை அரசியல் வாதிகள் கருத்தில் கொண்டால் என்ன? என மக்கள் அடிக்கடி கேட்கிறார்கள். உங்கள் தொழில்ஸ்தானத்தில் பிரச்சினைகள் ஏற்படும். நிதானமாகச் செயற்படவும். இடம்மாறத் தேவையில்லை. உங்களின் இடத்திலுள்ளவர்கள் உங்களுக்குப் பயப்பட வேண்டிவரும். நீதியற்றவர்களை எதிர்த்து வெற்றி சூடுவீர்கள். நல்லவர்களை ஆதரிப்பீர்கள். அவர்களும் உங்களுக்கு உதவிகள் செய்து தருவார்கள். சிரசுவருத்தம், யோசனை, நெஞ்சுவருத்தம், வழுக்கிவிழல் என்பன வரலாம். வியாபாரத்துறை, மருந்துத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன்.*

### தனுசு

ஒருவர் நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் அவரின் பலவீனம் - குறைகுற்றங்கள் புரியாமல் இருக்காது. குற்றம் செய்யாமல், கஷ்டம் அனுபவிக்காமல் முன்னேற்றம், அனுபவம், ஞானம் வராது. எனவே தொழில்ஸ்தானத்தில் பல தரப்பட்ட அபிப்பிராயங்கள், போராட்டச் சிந்தனைகள் ஏற்பட்டு மனம் குழம்புவீர்கள். குடும்பத்தில் தந்தை வழி அல்லது சகோதர வழியினருடன் அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டு மனம் கலங்குவீர்கள். இடமாற்றம்- பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்வது நன்று. ஓடியவர்கள் தேடிவரும் காலமாகும். இழந்தவை அறிந்துவர இடமுண்டு. வயிற்றுநோ, இடுப்புவலி, குடல் வருத்தம், தலையிடி என்பன வரும். வானொலி, தொலைக்காட்சி செய்தித் தொடர்பானதுறை, வியாபாரம், போக்குவரத்து, ஆராய்ச்சித் துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள், புதன்.*

### மகரம்

மக்கள் உழைத்து வாழ முயல வேண்டும். மற்றவர்களின் உழைப்பை ஏமாற்றி, தட்டிப்பறித்து வாழ்பவர்களால் எப்பொழுதும் தொல்லையும்- துன்பமும்தான் மிஞ்சும். தானும் துன்பப்பட்டு மற்றவர்களையும் வாழவிடாது துன்பத்துக்குள் ஆழ்த்தி சீரழித்து விடுகின்றார்கள்.

எனவே நீங்கள் உங்கள் தொழில ஸ்தானத்தில் அவதானமாக இருக்கவும். இடமாற்றங்களால் அவதிகள் ஏற்படலாம். வாகன சுகம் ஏற்படலாம். எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்க இடமுண்டு. நரம்புச்சோர்வு, மனக் குழப்பம், மூட்டுவலி, பக்கவாதம், கைகால் பிடிப்பு என்பன ஏற்படலாம். பிரயாணம் தாமதமாகும். பொருள் தவறலாம். வியாபாரத் துறை, சட்டத்துறை, மருத்துவத் துறை, பாதுகாப்புத்துறை, சமயத் துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன், சனி.*

### கும்பம்

கௌரவமாக நாம் வாழவேண்டுமாயின் உரிமைகள் பெற்று, பயமற்ற நிலையில் இருக்க மனிதர்கள் முயற்சிக்க வேண்டும். இதேபோன்று உங்கள் தொழில் ஸ்தானத்திலும் இருக்க முயலுவீர்கள். அதனால் பலரதும் அன்பைப் பெறுவீர்கள்.

எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றம் ஒன்று ஏற்படலாம். அடிக்கடி கோபங்கள் வந்தபடி இருக்கும். தூரதேசத்திலிருந்து செய்திகள் வரும். புடைவைகள் அல்லது நகைக்காக அதிக செலவுகள் செய்யவேண்டி ஏற்படலாம். உறவினர்கள் மனச்சஞ்சலத்தைத் தருவார்கள். அடிக்கடி மறதிவரும். தொண்டை வறட்சி, பயம், அதிக யோசனை என்பன வர இடமுண்டு. பாதத்தில் வருத்தம், நீர்வடிதல் சிலருக்கு ஏற்படும். போக்குவரத்துத்துறை, விவசாயத்துறை, மருத்துவத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினருக்கு நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

மனித மனங்களின் ஆசைகள், அகன்று நின்று போராடும். அந்த ஆசைகள் நிறைவேறிவிட்டால் மிகவும் சுருங்கிய சூனிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு விடுகிறார்கள். அதனால் விட்டுக்கொடுத்து விலகி நடக்கும் பக்குவ நிலைகளை அடைந்து விடுகின்றார்கள். இந்த அனுபவங்கள் உங்களுக்கு உங்கள் தொழில் ஸ்தானத்தில் வரஇடமுண்டு. அடிக்கடி கோபம் வரும். காணி, வீடு, சகோதரம் போன்ற விஷயங்களில் ஈடுபாடு ஏற்படும். வாகன இழப்பு அல்லது செலவு யோசனை தரும். கடற்றொழில், போக்குவரத்துத்துறை, வியாபாரம், தொழில்நுட்பத்துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், வியாழன், சனி.*


## பாராட்டு விழா



## உயர்திரு.பொன் குகநாதன் B.Sc.

உடுவில், கமநல சேவை பெரும்பாக உத்தியோகஸ்தர் 31.10.2000இல் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் உயர்திரு. ப.சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தமையை கௌரவித்து உடுவில் கமநல கேந்திர நிலைய விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசம் இன்று (10.12.2000) ஞாயிறு காலை 10.00 மணிக்கு மேற்படி நிலைய கூட்ட மண்டபத்தில் கமநலகேந்திர நிலையத் தலைவர் திரு.செ.இலகுநாதன் தலைமையில் பாராட்டுவிழாவை நடத்தவிருக்கின்றது.

*சி.திருக்குமரன்,*
*(தலைவர்)*
*ஆ.குலசிங்கம்*
*(செயலாளர்)*

*கமநல கேந்திர நிலைய*
*விவசாய சம்மேளனங்களின்*
*சமாசம், உடுவில்.*

(81474)

உ
ஓம் கணபதி துணை
அரி ஓம் நமோ நாராயண நமதே

## ஜெயந்தி தின விழாவுக்கு நிதி சேகரிப்பு

அன்புள்ளங்களே!

எதிர்வரும் 17.12.2000 ஞாயிறு அன்று இராமகிருஷ்ண பரமஹம்சரின் துணைவியாரும், அன்பே உருவாகியவருமான தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் ஜெயந்தி தினமாகும்.

இத்தினத்தை கைலாசபதி அரங்கில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு- இலட்சும கடாட்சம் உள்ள - நிதிதர விரும்பியோர் கீழ்க்காணும் முகவரியுடன் நேரிலோ, தொலை பேசியிலோ தொடர்பு கொள்ளவும்.

**அன்னையின் தொண்டன்,**
**15/10 , இராமநாதன் வீதி,**
**தலையாழி, கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**T.P.2576**

*பிற்குறிப்பு:-*

விளம்பர நோக்குடனோ அல்லது வேறு நிபந்தனைகளுடனோ தரப்படும் பணம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(C/14183)

நூலகம் யாழ்ப்பாணம்

# ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் புதிய போக்கு

நீச்சல் தெரியாமல், நடு ஆற்றில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஒருவர் உயிர்தப்ப, கையில் அகப்பட்டதை மரக்கட்டை என்று எண்ணிக் கட்டிப்பிடித்தார். ஆனால், அது முதலையாக இருந்தால் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி எப்படி இருக்கும்......? அத்தகைய அதிர்ச்சியைத்தான் இலங்கைத் தமிழர்கள் சமீப காலமாக அனுபவித்து வருகின்றார்கள்.

மொழியாலும், இனத்தாலும், பண்பாட்டாலும் தங்களுடன் மரபுவழி இணைப்பைக் கொண்ட இந்தியா, தங்களைக் காப்பாற்ற உதவும் என்று ஈழத் தமிழர்கள் காத்திருக்க - பார்த்திருக்க - அவர்களின் காலை வாரிவிடும் 'அதிரடி' நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்வதைப் பார்த்தால் ஆபத்துக்கு அஞ்சி மரக்கட்டை என்று எண்ணி ஈழத் தமிழர்கள் கட்டிப்பிடித்தது முதலையைத்தான் என்று தோன்றுகின்றது.

ஆனால், இந்திய அரசு புலிகளுக்கு எதிராக இப்போது ஆரம்பித்திருக்கும் 'திடீர்ப்பாய்ச்சல்' புலிகளுக்கு பெரும் பாதிப்பு எதனையும் ஏற்படுத்தமாட்டாது என்றே இந்திய அரசியல் ஆய்வாளர்கள் பலரும் கருதுகின்றனர்.

## பிரபாவின் பிறந்ததினம்

பிரபாகரனின் பிறந்த தினமான கடந்த நவம்பர் 26 அன்று, தமிழகத்தின் சென்னை, மதுரை போன்ற நகரங்களிலும், யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியிலும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வண்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பல இடங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்துப் பேரணிகளும் நடத்தப்பட்டன. அத்துடன் பிரபாகரனின் பிரமாண்டமான படங்களும் தமிழீழத்

## பாதகங்களை ஏற்படுத்தாது என்கிறார்கள் ஆய்வாளர்கள்

திற்கு ஆதரவான பதாகைகளும் பல்வேறு நகரங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

தமிழீழ ஆதரவு அமைப்புகள் மற்றும் இயக்கங்களே பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு இத்தகைய தடாலடி ஏற்பாடுகளை செய்திருந்தன.

இந்த விமரிசையான ஏற்பாடுகள் மறைந்த ராஜீவ்காந்தியின் மனைவி சோனியா காந்தியைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் கட்சியினருக்கும், அவர்களது வழிவந்த மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸுக்கும் எரிச்சலூட்டின. காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவும், தனது அரசியல் எதிரிகளைத் தாக்க இதனைப் பயன்படுத்திக் கொண்டார்.

தமிழக மக்களை ஏமாற்றி, முதலமைச்சர் பதவியைத் துஷ்பிரயோகம் செய்து, பல கோடி ரூபா ஊழல் புரிந்ததற்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஜெயலலிதா, பா.ஜ.மு.கூட்டணி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம் இந்திய இறையாண்மையைச் சீர்குலைத்து விட்டதாகக் குரல் எழுப்புகிறார்.


தவிர, அரசியல் கோமாளி என்று இந்திய விமர்சகர்களால் சித்தரிக்கப்படும் சுப்பிரமணிய சுவாமியின் ஜனதாக்கட்சி -

தீவிரவாதத்தை அடியோடு வெறுப்பதாகக் கூறிக்கொண்டு மேற்குவங்கத்தில் எதிர்க் கட்சியான திரிணாமூல் காங்கிரஸ் தொண்டர்கள் மீது கடும் வன்முறைத் தாக்குதல்களை நடத்திவருமான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள கம்யூனிஸ்ட் கட்சி-

ஆகியவை போன்ற பிற எதிர்க் கட்சிகளும் மத்திய அரசு புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் குறைகூறி, ஒரு பிடி பிடித்தன.

நாடாளுமன்றத்திலும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள், வாஜ்பாய அரசு புலிகள் மீதான இறுக்கத்தை தளர்த்துவதாகக் குற்றஞ் சுமத்தி வருகின்றன.

இதைத்தவிர, சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன், கன்னட நடிகர் ராஜ்குமாரைக் கடத்திப் பின்னர் விடு



தலை செய்ததில், விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பிருப்பதாகத் தமிழகத்தில் கிளப்பட்ட - இதுவரை நிரூபிக்கப்படாத ஆதாரங்களற்ற - குற்றச்சாட்டுகளும், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நீதிமன்றம் வழங்கிய புலிகளுக்கு எதிரான தீர்ப்பும், மத்திய அரசுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தின.

இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசில் யார் இருந்தாலும் புலிகளுக்கெதிராகப் பேசியே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும் என்று சுட்டிக்காட்டும் ஆய்வாளர்கள், பிரபாகரனைக் கைதுசெய்து நாடுகடத்த முயற்சி எடுக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் அத்வானி பேசியதும், எதிர்க்கட்சிகளின் அழுத்தத்தைச் சமாளிக்கும் வார்த்தைகளே என்று கூறுகிறார்கள்.

## இலங்கைக்கு வந்த குழு

அடுத்து பிரபாகரனை நாடுகடத்துவது குறித்து ஆலோசிக்க இந்திய அதிகாரிகள் இலங்கை வந்ததாகக் கூறப்படுவது 'காகம் உட்காரப் பனம் பழம் விழுந்த கதை' என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ராஜீவ் கொலையின் பின்னர் நளினி உள்ளிட்டவர்கள் மீது குற்றஞ் சுமத்தி, வழக்கு நடத்தித் தண்டனைகள் அறிவிக்கப்பட்டது நமக்குத் தெரிந்த விடயம்.

இதேசமயம் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டுள்ள அந்நிய சக்திகள் மற்றும் சதிச் செயல்கள் குறித்து விசாரணை நடத்த நீதிபதி ஜெயின் என்பவர் -தலைமையில் தனிநபர் ஆணைக்குழு (கமிஷன்) ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த ஜெயின் கமிஷன் நீண்ட கால இழுத்தடிப்புக்குப் பின்னர் மத்திய அரசிடம் சமர்ப்பித்த அறிக்கையில் சுப்பிரமணியசுவாமி, அரசியல் சாமியார் சந்திராசாமி உட்பட சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களிடம் விசாரணை நடத்தினால் மறைக்கப்பட்ட உண்மைகள் பல வெளிவரக்கூடுமென்று குறிப்பிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் ஜெயின் கமிஷன் பல்முனைக் கண்காணிப்புக் குழு என்ற ஒன்றை அமைத்து ராஜீவ் கொலைப் பின்னணி குறித்து விசாரித்து வந்தது.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் விசாரணைகளைப் பலமாதங்களாக நடத்திவரும் அந்தக் குழுவே தற்போது தனது பணியின் தொடர்ச்சியாக இலங்கைக்கு வந்து விசாரணை நடத்திவிட்டு திரும்பியுள்ளது.

அந்தக் குழுவின் அதிகாரம் ஒரு வரையறைக்குட்பட்டது என்று சுட்டிக்காட்டும் ஆய்வாளர்கள் விசாரணையை முடித்து ஜெயின் கமிஷனிடம் அறிக்கை சமர்ப்பிப்பது மட்டுமே பல்முனைக் கண்காணிப்புக் குழுவின் பணி என்று கூறுகின்றனர். ராஜீவ கொலையில் புலிகளின் பங்கு குறித்துத் தனி நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்ட நிலையில், புலிகளைப்பற்றி விசாரிப்பதைவிட, கைதான புலிகளிடம் அவர்களுடன் தொடர்புபட்டிருந்த மற்றவர்களைப்பற்றி விசாரிப்பதே அந்தக் குழுவின் தற்போதைய கடமை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பிரபாகரனை நாடு கடத்துவது அந்தக் குழுவின் சக்திகுட்பட்டதல்ல என்று சுட்டிக்காட்டும் அவர்கள், பல்முனைக் கண்காணிப்புக் குழு இலங்கை வந்ததைப் பிரபாகரனை நாடுகடத்துவதுடன் இணைப்பது அர்த்தமற்றது என்கின்றனர்.

## இராணுவ உதவிகள்

இலங்கைத் தமிழர்களை கலங்க வைக்கும் 'ராணுவ உதவிகள் மற்றும் ஈழவேந்தன் நாடுகடத்தப்பட்டமை போன்ற விடயங்களில் இந்தியாவின் சுயநலம் கலந்திருப்பதை இந்திய அரசியல் அவதானிகள் ஒப்புக்கொள்கின்றனர்.

காஷ்மீரில் பயங்கரவாதத்தைப் பாகிஸ்தான் ஆதரித்து வளர்ப்பதாகத் தான் கூறிவரும் குற்றச்சாட்டுக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டுவதில் இந்தியா கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளது.

இதற்கு வலிமை சேர்க்க, சர்வதேச ரீதியில் பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் அமெரிக்கா உட்பட முக்கியமான நாடுகளுடன் இணைந்து செயற்பட இந்தியா உடன்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சமயத்தில், விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுவதாகக் கூறும் இலங்கை அரசு, அதற்காக உதவி கேட்கும் போது, அதனை மறுக்க முடியாத நிர்ப்பந்தத்தில் இந்தியா உள்ளது.

மறுத்தால் தீவிரவாதத்தை எதிர்க்கும் நாடு என்ற அந்தஸ்தை இந்தியா இழக்க நேரிடும்

அப்படியான நிலை பாகிஸ்தானுக்குச் சாதகமான - இந்தியாவுக்கு எதிரான பரப்புரைகளுக்கு ஏற்ற சந்தர்ப்பத்தை - உருவாக்கும் என்று இந்தியா அஞ்சுகிறது. தவிர, இராணுவ உதவிக்கு மறுத்தால் ஜனநாயக அரசு ஒன்றை தீவிரவாதிகளிடம் இருந்து காப்பாற்றும் விடயத்தில் உதவிசெய்ய மறுப்பதாக இந்தியா மீது குற்றஞ்சாட்டப்படும்.

இது, ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடு ஆகும் இந்தியாவின் நீண்டகால அவாவை நிராசையாக்க வழிகோலிவிடும்.

இலங்கை அரசு கோரிய போர்க் கப்பல்கள் உள்ளிட்ட உதவிகளை இந்தியா வழங்கியதுக்கு மற்றொரு காரணமும் உண்டு.

இலங்கை கோரும் இராணுவ உதவியை இந்தியா வழங்காவிட்டால், பாக்கிஸ்தானோ அல்லது வேறு ஒரு நாடோ அதே உதவிகளை இலங்கைக்கு வழங்கும்.

அத்துடன் தமது நிபுணர்களையும் பயிற்சியளிப்பவர்கள் என்ற போர்வையில் இங்கு அனுப்பும்.

தனது காலடியில் உள்ள கடற்பரப்பிலும், இலங்கையிலும் வேறு நாடு வழங்கிய போர்க்கப்பலும், அதன் நிபுணர்களும் தரித்திருப்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அமைந்துவிடலாம்.


இதனால், தனக்கு நன்கு பரிட்சயமான போர்க்கப்பலை இலங்கைக்கு வழங்க இந்தியா முன்வந்துள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகினறனர்.

## பிராந்திய மேலாண்மை

இலங்கைப் பிரச்சினையில் இறுதியான, நிரந்தரத் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதில் தற்போது நோர்வே, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மேலை நாடுகள் ஆர்வம் காட்டிவருகின்றன.

ஆசியாவில், அதுவும் தான் தலையிட்டுப் பின்வாங்கிய பிரச்சினையில், தீர்வொன்றை ஏற்படுத்திய கௌரவத்தை வேறு நாடுகள் தட்டிச்செல்வது, பிராந்தியத்தில் தனது மேலாண்மைக்கு இழுக்கு என்று இந்தியா கருதுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீர்வைப் பெற்றுக்கொடுத்த கௌரவத்தை மேலை நாடுகள் தட்டிச் செல்வதை, புறந்தள்ளுவது இந்தியாவுக்கு சுலபமான காரியமில்லை.



இலங்கையின் பெரும்பான்மை மக்கள் இன்றும் இந்தியாவை தமிழர் ஆதரவு சக்தியாகவே நினைக்கின்றனர். சமாதானத் தீர்வு முயற்சியில் முக்கிய பங்கேற்க இது இந்தியாவுக்குப் பாதகமான விடயம்.

அதேசமயம், புலிகளுக்கு எதிராகத் தனது மேலாண்மையை நிலைநாட்டுவது ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்திய அரசால் குறிப்பாக பாரதிய ஜனதா அரசால் இயலாத காரியம்.

ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் வை.

**பாமரன்**

கோபாலசாமி, ராமதாஸ், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் போன்றோர் புலிகளுக்கு எதிராக இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கடுமையாக எதிர்ப்பார்கள் என்பது உலகறிந்த விடயம்.

பாரதிய ஜனதாக் கட்சியின் ஆணிவேராக இருக்கும் - மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் - ஆர்.எஸ்.எஸ். மற்றும் பால் தாக்கரேயின் சிவசேனா ஆகிய இந்துத்துவ அமைப்புகள் தமது அடிப்படை இந்துத்துவ கொள்கைக்கு விரோதமாக, மற்றோரு மதம் சார்ந்த தரப்புக்கு சாதகமாக நடக்க மத்திய அரசை அனுமதிக்கப் போவதில்லை.

இதேசமயம், சுயநலனை மட்டும் கருத்தில் கொண்டு, தடாலடியாக இலங்கைப் பிரச்சினையில் முடிவெடுப்பது, விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் என்று கடந்த காலம் இந்திய அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

## நாடு கடத்தல்

இந்த நிலையில், விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற கொள்வதாக சிங்கள மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தவே ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒருவர் புலிகளுக்கு ஆதரவான செயலில் ஈடுபட்டாலோ அல்லது பிரிவினைவாத, தீவிரவாத சக்திகளுடன் அவருக்குத் தொடர்பிருந்தாலோ அவரைக் கைதுசெய்து வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்க இந்தியச் சட்டங்களில் இடமுண்டு.

அப்படியிருக்க, 'விசா' முடிவடைந்ததைக் காரணம் காட்டி 'விசா' இன்றித் தங்குவது சட்டபடி குற்றம் என்ற போதிலும் அவர் மீது வழக்குத் தொடராமல் - ஈழவேந்தனை நேரடியாக இலங்கைக்கு இந்திய அரசு அனுப்பியுள்ளதை அவதானிகள் தமது கருத்துக்கு சான்றாக முன்வைக்கின்றனர்

ஆயினும், இந்தச் செயற்பாடுகள் முழு அளவில் தமது எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் என்பதில் இந்திய அரசுக்குத் திருப்தி ஏற்படவில்லை என்றே கருதப்படுகிறது.

## சமயோசித முடிவு

இந்தச் சிக்கலான சூழ்நிலையில், பல்வேறு எதிர்ப்புகளையும் கவனத்தில் கொண்டு, சிங்கள மக்களின் சந்தேகத்தைப் போக்கி, மேலை நாடுகளையும் சமாளித்து, பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவின் முக்கியத்துவத்தை நிலைநாட்ட வேண்டிய பாரிய பொறுப்பு பாரதிய ஜனதா அரசுக்கு - குறிப்பாக பிரதமர் வாஜ்பாய் மற்றும் உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோருக்கு - ஏற்பட்டுள்ளது.

பல மாங்காய்களை ஒரே கல்லில் வீழ்த்துவதைப் போல், அனைத்தையும் சமாளிக்க இந்திய அரசு 'பிரபாகரனை நாடுகடத்துவது' என்ற விடயத்தை சமயோசிதமாகக் கையில எடுத்துள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இலங்கையில் சமாதானத் தீர்வு ஏற்பட, பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையை கைவிடுவது என்ற ஒத்துழைப்பு அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டி சம்மந்தப்பட்ட தரப்புகள் தன்னை நாடிவரும் என இந்தியா எதிர்பார்க்கின்றது. இதன்மூலம இலங்கைப் பிரச்சனையில் தனது முக்கியத்துவத்தை நிலைநாட்டலாம் எனக் கருதி இந்தியா காய்களை நகர்த்தி வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்ட பின்னரும் விடுதலைப் புலிகளின் அதிதீவிர ஆதரவாளரான பழ.நெடுமாறன், ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் சமாதானப் பணிகளைக் கண்காணிக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம்பெறவேண்டும் என்று இலங்கையிடம் கோரியுள்ளார்.

பழ.நெடுமாறனின் கோரிக்கையைச் சுட்டிக்காட்டும் ஆய்வாளர்கள், திரைமறைவில், மாபெரும் அரசியல் நாடகம் நடப்பதாகவே தீர்மானித்துள்ளனர்.

அது சரியா? தவறா? என்பதை அறிய காலத்தின் பதிலுக்குக் காத்திருப்போம். ☆☆☆


மலிவு விற்பனை

லைடன் புடைவை நிலையம்

நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு

01.12.2000 - 31.12.2000 வரை

வாடிக்கையாளரின் நன்மை கருதி விசேட
கழிவுடன் விற்பனைக்கு வருகிறது.
இன்றே முந்திக் கொள்ளுங்கள்!
கவுண், புடைவைகள், துணிகள், சேட்டிங்,
சூட்டிங் மற்றும் பல வகையான துணி வகைகள்
வாங்கிக்கொள்ள முந்துங்கள்!

லைடன் புடைவை நிலையம்

(பஸ்நிலையம் முன்பாக)

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/14092)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு உண்டு

GRX8-SONY,2000W, 3CD PLAYER செற், பெண்கள் துவிச்சக்கரவண்டி (HERO) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 41, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். T.P.No : 2226. (81332)

ஆலயப் பாவனைக்கு உகந்த புதிய - பெரிய 20 கோண் ஸ்பீக்கர்களும் (இந்தியத் தயாரிப்பு), மின் இயந்திரம் பொருத்தக்கூடிய வண்டிலும (சிறு திருத்தம் செய்ய வேண்டியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு. (81452)

நல்ல நிலையில் உள்ள, கூடிய உற்பத்தியைத் தரக்கூடிய தையல் மெசின்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 27/3, நாகராஜ லேன், பாண்டியன்தாழ்வு. (81449)

குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- S.M. சுப்பிரமணியம் (பீற்றூட் மணியம்), நிதியம்பணை,மல்லாகம். (C/14215)

சாளி மோட்டார் சைக்கிள், ஹுமாலா ஆண்கள் துவிச்சக்கர வண்டி, நஷனல் பனசொனிக் டெக், றேடியோ, BOX FAN மற்றும் ஏனைய பொருள்களும விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல. 34/7, செட்டித்தெரு, நல்லூர். (81458)

சொந்தப் பாவனையில் உள்ள மொறிஸ் மைனர் EN மொடல் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சு. விவேகானந்தன், V.H. லேன், இருபாலை, கோப்பாய். (81488)

## வெளிவந்துவிட்டது

"வெற்றி நல்கும் விநாயக ஷஷ்டி விரதம்", விரத அனுட்டான முறைகளோடு விநாயகர் அகவல், விநாயகர் கவசம், பெருங்கதை (பிள்ளையார்கதை) ஆகியனவும் அடங்கியது. தொகுப்பு:- "கோப்பாய் சிவம்". (81397)

## FOR SALE

YAMAHA ELECTRIC ORGAN P.S.S. 280 [JAPAN], CHINESE VIOLIN, ELECTRIC STEAM IRON. No.25, SOMASUNDERAM AVENUE,CHUNDIKULI. (81506)

## தவறிவிட்டது

இரத்தினசிங்கம் மேரி கொஸ்கா என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0908024509) பருத்தித்துறைக்கும் உடுப்பிட்டிக்கும் இடையில் பஸ்ஸில் (இல.751) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தா. ஆசிர்வாதம், C/O இரத்தினசிங்கம், 4.ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (81483)

மாணிக்கம் தருமலிங்கம் என்பவருடைய 234/10, சென். செபஸ்ரியன் வீதி, ஓட்டுமடம் என்னும் முகவரியுடைய விசேட அ.அ. (இல.09020 22309) கூழாவடிக்கும் தட்டாதெருவிற்கும் இடையில் 07.12.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், மேற்குறிப்பிட்ட முகவரியில் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். (81482)

மண்டைதீவைச் சேர்ந்த தபானந்தம் கோகுலவண்ணன் என்பவருடைய தே.அடையாள அட்டை (இல. 701861000v) நாச்சிமார் கோயிலுக்கும் யாழ்.நகருக்கும் இடையில் 04.12.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல.09, நாவலடி லேன், வண்ணார் பண்ணை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (81492)

கல்வியங்காட்டிற்கும் யாழ்.பஸ் நிலையத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் (08-12-2000) வெள்ளிக்கிழமை காலை தெய்வ நேர்த்திக்காகக் கொண்டு செல்லப்பட்ட கைச்சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஊர்மிளா போட்டோ, 3ஆம் கட்டை, கல்வியங்காடு எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (81477)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்தகணிதம் பலவருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மிகவும் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் சிறப்பாக முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும். R. பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey.) Dip-IN-Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (81486)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு

இறைச்சிக் கோழி கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- இல. 15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (81503)

## இறைச்சிக்கோழி

சேவல், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (81132)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயது நற்குணமுள்ள மணமகனுக்கு சைவ போசன குடும்பத்தைச் சேர்ந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1154, மே/பா உதயன். (41490)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்துப் பெற்றோர் தமது செவ்வாய் தோஷமற்ற (சுவாதி நட்சத்திரம்) பிள்ளைகளுக்கு தகுந்த மணமக்களை எதிர்பார்க்கின்றனர். மகன் (விரிவுரையாளர்) வயது 40, கிரக பாவம் குறைவு, மகள் வயது 30, கிரக பாவம் கூட. தொடர்பு:- விள. இல.1152, மே/பா உதயன். (81423)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.10

அகவொளி குடும்ப வளத் துணை நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பாங்சால் வீதியில் உள்ள அதன் நிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் 'ஆற்றுப்படுத்தல் கலையின் பின்னணியில் உறவுகள்' எனும் தலைப்பில் உளவளத் துணையாளர் திருமதி சிரோமணி லெனாட் கருத்துரை வழங்குவார். (இ-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தெல்லிப்பழை K.K.S, வீதி தபால் கந்தோர் அருகாமையைச் சேர்ந்தவரும், தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலைய ஸ்தாபகரில் ஒருவரும், இந்நிலையத்தில் முன்னர் பல பதவிகளை வகித்தவரும், தற்போதைய போஷகரும், பிரபல கட்டட ஒப்பந்தக்காரரும், தெல்லிப்பழை கரன் மதுபான நிலையத்தின் உரிமையாளரும், எமது சமூகத்தின் அடிமட்ட மக்களின் உரிமைக்காக முன்னின்று பாடுபட்டவரும், பல சமூக சேவை நிலையங்களின் உறுப்பினரும், தொழிலாளருக்காக பல வழிகளில் உழைத்தவரும் ஆகிய

### திரு.நா.ஆறுமுகம்

அவர்கள் நீதி அமைச்சினால்
மல்லாகம் மாவட்ட நீதிபதி உயர்திரு.பா.சுப்பிரமணியம்
*அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாக*
*நியமனம் பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சியுடன்*
*வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

நிலைய நிர்வாகிகளும்,
உறுப்பினர்களும்.
தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையம்.

*K.K.S. வீதி,*
*தெல்லிப்பழை.*

(81495)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கை அதிபர் சேவையில் தரம் 1இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ள எமது அதிபர்


### உயர்திரு.கி.கணேசன்

அவர்களை நலமுடன் பல்லாண்டு காலம் வாழ இறையருள் வேண்டிப் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம்,
யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை.

81472

## மிலேனியம் ஆண்டில் அகவை ஒன்று



## செல்வன் திலக்ஷன்

வராகி அம்மன் கோயிலடி உயரப்புலம்
ஆனைக்கோட்டையைச சேர்ந்த
**மகேந்திரராஜா~சசிகலா தம்பதிகளின்**

செல்வப் புதல்வன் திலக்ஷன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (10-12-2K) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், அத்தைமார், தாத்தா, அம்மம்மா, ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், லண்டனில் வசிக்கும் பெரியமாமா, யாழில் வசிக்கும் சின்னமாமா, அன்ரா, டோகாவில் வசிக்கும் மகாசித்தி, சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வராகி அம்மன் அருள் பெற்று, பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
ம.மகேந்திரராஜா (தந்தை)

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

(81479)

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் திகதி நாளை (11.12.2000) திங்கட்கிழமை பகல் 10 மணி தொடக்கம் 10 மணி 50 நிமிடத்திற்குள் வரும் மகரலக்கின சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**பிரபாகரன்**
(Computer Analyst-Canada)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுவேந்திரனி**
(Student-Physics Special Degree, University of Jaffna.
அவர்களுக்கும்

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், 33, Alexandar Road, வெள்ளவத்தையிலுள்ள Miaml Reception's Ruby Hall இல் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

திரு.திருமதி தனபாலசிங்கம்
179/3, Brown Road,
Jaffna.

திரு.திருமதி வேதாரணியம்
திரு.திருமதி பாஸ்கரன்
'YOGAS'
333 (537A) Navalar Road, Jaffna.
52,Ward Place, Clolmbo - 07.
T.P - 689130.

(C/14216)

(இருவீட்டார் அழைப்பு)

யாழ்ப்பாணம்

## தரம் 9 மாணவர் கவனத்திற்கு

யா/ நெல்லியடி ம.ம.வி யில் இயங்கும்யா/ உசன் இராமநாதன் ம.வியில் கற்கும் 9 ஆம் தரத்தைச் சேர்ந்த சகல மாணவரையும் (உசன் உட்பட) ஏனைய பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கற்கும் யா/ உசன் இராமநாதன் ம.வியைச் சேர்ந்த9 ஆம் வகுப்பு மாணவரையும் முறையே புள்ளிகளைப் பெறவும், அவர்கள் பெற்ற புள்ளிகளைத் தரவும் வரும்படிஅதிபர் அழைக்கிறார்.

இடம்: யா/ நெல்லியடி ம.ம.வி.
காலம்: **11. 12. 2000**
நேரம்: முற்பகல் 10- 4 வரை.

அதிபர்.

(81519)

## நன்றியுடன் பாராட்டுகிறோம்

எமது சிவன் தேவஸ்தானத்துக்கு மின் பிறப்பாக்கியை (ஜெனரேற்றர்) தந்துதவிய ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளரும், கௌரவ செயலாளர் நாயகமும், வடக்குப்புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சருமான

**K. N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்,

யாழ். மாவட்ட அமைப்பாளரும்,யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

**V.K. குகேந்திரன் [ஜெகன்]**
அவர்களையும்,

வேலணை - புங்குடுதீவு பிரதேச சபைத் தலைவர்

**கருணாகரகுருமூர்த்தி**
அவர்களையும,

புங்குடுதீவு ஈ.பி.டி.பி. அமைப்பாளர்

**S. போல்**
அவர்களையும்

பாராட்டி மகிழ்வதோடு சிவனருள் கிடைக்க சிவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ நாகேந்திர குருக்கள், (தர்மகர்த்தா)
சிவன்|தேவஸ்தானம்,
புங்குடுதீவு- 3.

(81514)

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை இராசரத்தினம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது சுன்னாகம் தெற்கில் வசிப்பவருமான சங்கரப்பிள்ளை இராசரத்தினம் (A.D. வர்த்தகர்) அவர்கள் 08—12—2000 வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிஐயா (கூட்டுறவுப் பரிசோதகர்), வேலாயுதப்பிள்ளை (முன்னாள் அதிபர், கொழும்புத்துறை, மட்டக்களப்பு பயிற்சிக்கலாசாலை), ஆகியோரின் சகோதரரும், பாலச்சந்திரன், சந்திரபாலன், ரஜனி, ரூபி (ஆசிரியை, உடுவில் மான்ஸ் ம.வி.), ஆகியோரின் அன்புத் தந்தையும், சமலாதேவி, சிவப்பிரகாசம் (காசாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராசா (சுவிஸ்), பிறேமா, தர்மா (சுவிஸ்), பவன், குலதீபன், உமா, பாமா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08—12—2000 வெள்ளியன்று நடைபெற்று பூவோடை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
செ. சிவப்பிரகாசம்
(மருமகன்)
"செல்வமஹால்"
சுன்னாகம் தெற்கு.

(81502)

### செல்வன் துஷ்யந்தன் மகாதேவா

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட துஷ்யந்தன் மகாதேவா (முன்னாள் மாணவன் சென். ஜோன்ஸ் கல்லூரி) 8.12.2000 வெள்ளிக்கிழமை அன்று மட்டக்களப்பில் அகால மரணமானார்.

அன்னார் திரு. திருமதி மகாதேவா (மீன் பிடித் திணைக்களப் பொறியியலாளர்-மட்டக்களப்பு) இராஜகுமாரி (முன்னாள் ஆசிரியர், சாதனா கல்லூரி, மூத்திரைச் சந்தி), ஆகியோரின் பிரியமுள்ள மகனும், ராகுலன் (லண்டன்), அனுஷியா (மட்டக்களப்பு மகளிர் கல்லூரி, மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினம் துரைராஜா (முன்னாள் உரிமையாளர், "துரை" மோட்டோர்ஸ், இராஜகுமாரி டிரான்ஸ்போட்) அவர்களின் அன்பு மருமகனும் அன்னமுத்து-இரத்தினம் அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10-12-2000) ஞாயிற்றுக்கிழமை 3.00 மணிக்கு மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகேசு சரவணபவான்
(கலைமகள் விலாஸ்
சங்கானை)
அரசடிவீதி,
வடலியடைப்பு.
பண்டத்தரிப்பு.

(81508)

## திருமலையில் மீன் பிடித் தடை நீக்கம்

திருகோணமலை, டிசெ. 10

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் கடந்த மாத இறுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களை அடுத்து மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை தற்பொழுது நீக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 8.30மணி முதல் மாலை 4 மணிவரை மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ-7-14)

## சரசாலை எலும்புக் கூடு வயோதிபருடையது

தென்மராட்சி, டிசெ. 10

சரசாலை தெற்கு கமலா சனி வீதியில் உள்ள வீடொன்றில் காணப்பட்ட எலும்புக் கூடுகளில் ஒன்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை (வயது 80) என்பவருடைய எலும்புக்கூடே அது என்பது எலும்புக்கூட்டுடன் காணப்பட்ட ஆடைகள் மூலம் அடையாளம் காணப்பட்டது.

இப்பகுதியில் தொடர்ச்சியான ஷெல்வீச்சு இடம்பெற்ற போது இவர் அங்கிருந்து வெளியேற மறுத்து வீட்டில் தங்கியிருந்ததாகவும், கடந்த வாரம் இவரைத் தேடிச் சென்ற போது வீட்டினுள் இவரது எலும்புக்கூடு காணப்பட்டதாகவும் இவரது மருமகனான வே. கணேஸ் தெரிவித்தார்.

வீட்டு முற்றத்தில் காணப்பட்ட இன்னொரு எலும்புக் கூடு அடையாளம் காணப்படவில்லை.

(ஐ-31-117)

**ENGLISH SPOKEN AND GRAMMAR**

By: BRITTO

**புதிய பிரிவு**

ஆரம்பம்:- 13-12-2000
புதன்கிழமை
காலை 7 00
[பழைய நேரம்]

வகுப்புக்கள்:- திங்கள், புதன், வெள்ளி

இடம்:- கொக்குவில்
(ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)

(14223)

**Gr. 6 முதல் O/L வரை**

★ மாதாந்த பரீட்சைகளுடன் ஊக்குவிப்பு பரிசில்களும்

Standard Education With Good Discipline

SHAMROCK
29/3,
J/ சோமசுந்தரம்
அவன்யூ

(சி/14227)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய இசை ஆசிரியரும், இசையாசிரியை சிவயோகியின் கணவருமான

**வேதவனம் தபோதநாயகம்**
(இசைக் கலைமணி - மிருதங்கம் — (B Com.)

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினரதும், உறவினரதும் துயரத்தில் நாமும் பங்கு கொள்வதுடன். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இசையாசிரியர் கழகம்
யாழ்ப்பாணம்.

(81494)

## COMPUTER COURSES

**ACI**

**விடுமுறைகால கணனிப் பயிற்சி நெறி**

◆ [இலவசம்] ◆

காலம்:- 1 மாதம்

தொடர்ச்சியாக 3 மணித்தியால வகுப்புக்கள்

- A/L பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கானது.
- பாடசாலை செல்லும் மாணவர்களுக்கானது. (தரம் 8, 9, 10 O/L, A/L)
- தொழில் புரிவோருக்கானது

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு 1 10—12—2000 11.00 A.M
பிரிவு 2 13—12—2000 9 00 A.M

◆ இச்சலுகை முதலில் அனுமதி பெறும் 100 நபர்களுக்கு மட்டுமே!

தொடர்புகளுக்கு:

**Ajay Computer Institute**
**MANIPAY**

(மூத்த விநாயகர் கோயிலுக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில்)

(81463)

## பின் முற்றாகும் தீர்வை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
ஜெயலிங்கம் பெண் சுதர்சினி
(வைத்திலிங்கம் மகள்)
சூளானை சுன்னாகம்
வழக்காளி

எதிராக

வழ இல. மண நீக்கம்/100

குமரையா ஜெயலிங்கம்
மே/ பா. அ. குமரையா,
கொடிகாமம் வீதி,
புலோலி எதிராளி

இவ் வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி நீதிபதி திரு. பா. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவர் சார்பில் அவரின் சட்டத்தரணி திரு. பா தவபாலனும் சமுகமாயிருக்க, வழக்காளியால் அளிக்கப்பட்ட சாட்சியத்தையும், கோப்பிடப்பட்டிருந்த வ - 1 என்ற ஆவணத்தையும், ஏற்றுக் கொண்டு வழக்காளியை எதிராளி வன்முறையாகக் கைவிட்டுச் சென்றுள்ளார் எனத் திருப்திப்பட்டு எதிராளி வன்முறைக் கைவிடல் என்னும் திருமணம் சார் தவறு ஒன்றைப் புரிந்துள்ளார் எனக் கண்டு, அதனடிப்படையில் வழக்காளிக்கும், எதிராளிக்கும் இடையே 1997 ஆம் ஆண்டு மாசி மாதம் 09 ஆம் திகதி நிகழ்ந்த திருமணத்தை இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதும் ஆக்கிக்கட்டளையிட்டு இப் பின் முற்றாக்கும் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இப்பின் முற்றாகும் தீர்வை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று (3) மாத காலத்தினுள் ஆட்சேபனை எதுவும் மன்றிற்குச் சமர்ப்பிக்காவிடில், இப் பின் முற்றாக்கும் முற்றான தீர்வை ஆக்கப்படும்.

2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ஆம் திகதி வரைபு

வழக்காளியின் சட்டத்தரணி

(ஒப்பம்)
மாவட்ட நீதிபதி மல்லாகம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் மண நீக்கம்/ 100 இன் பின்முற்றாக்கும் தீர்வையின் உண்மைப் பிரதி என இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

செ. விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

(81509)

இதோ வந்துவிட்டன!

## விற்பனைக்கு

2001 ஆம் ஆண்டிற்கான

கண்கவர் வண்ணப் படக் கலண்டர்கள், டயறிகள்

விற்பனைக்கு வந்துள்ளன.

தொடர்பு:

**ஸ்ரீ முருகன்**
**SRI MURUGAN**

303, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

[சி/14190] T. P. No. 2670, 3588

## சுன்னாகத்தில் கடை மற்றும் காணி உடன் விற்பனைக்கு உண்டு

பின்வரும் கடைகள் மற்றும் காணிகள் உடன் விற்பனைக்கு உண்டு

(1) சுன்னாகம் சந்திக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் 18 ஆம், 19 ஆம் இலக்கங்களைக் கொண்ட 2 விசாலமான கடைகள் சிறிய காணி இடவசதியுடன்

(2) சுன்னாகம் தபால் நிலையத்துக்கு முன்பாக சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் 20 பரப்புத் தோட்டக்காணி.

உடன் தொடர்பு கொள்க:

விளம்பர இலக்கம் 1151,
மே / பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி/14200)

பருத்தித்துறை

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடப் பொருள் விற்பனை நிலையத் திறப்பு விழா

அன்புடையீர்!

எமது சங்கத்தால் புதிதாக அமைக்கப்பட்ட விற்பனை நிலையத் திறப்பு விழா நாளை (11-12-2000) திங்கட்கிழமை மதியம் 12.20 — 1.50 மணிவரை உள்ள சுப வேளையில் திறந்து வைக்க இருப்பதால் அத் தருணம் தாங்களும் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில்.

தங்கள் நல்வரவை நாடும்:
பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்
பரு. பல நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

(சி/14168)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 — 12 — 1979

மறைவு 10 — 12 — 1998

செல்வி

### ஜெயந்தி வயிரவநாதன்

ஜெயந்தி! உனது செயல்வலு, உறுதி
தன்னல மறுப்பு, சமூகப் பொறுப்பு
சிவந்த மலர்போல் சீரிய நெஞ்சம்
நன்மை மதிக்கும் நடத்தை, தைரியம்
பரந்த பண்புகள் கருதி
நிரந்தரம் நினைந்து பரிந்தோம்; உருகினோம்.

அன்புக்குரியோர்:
அப்பா, அம்மா, சகோதரிகள்,
தம்பி மற்றும் உறவினர்கள்.

கரந்தன் சந்தி,
நீர்வேலி தெற்கு.

(சி/14180)

## கல்யாண மண்டபம் அமைப்பு

கொழும்புத்துறை, டிசெ. 10

கொக்குவில் சுற்புலத்து அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் கோயிலில் கல்யாண மண்டப மீள் புனரமைப்பு வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருவதாக ஆலய பரிபாலனசபையின் தலைவர் செல்லையா இராசையா தெரிவித்தார். (ஐ-30)

## லண்டனில் நிகழ்ச்சிகள்

வடமராட்சி, டிசெ. 10

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் நிதிக்காக லண்டன், பெட்வோட், லோகன் மண்டபத்தில் நாட்டிய நாடகம், கர்நாடக சங்கீதம், வாத்திய இசை போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

லக்ஷ்மி, சபறிதா, மனோசர் ஆகியோர் இணைந்து சைவ நாயன்மார்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் வாழ்க்கையை மையமாக வைத்து மேடையேற்றிய நாட்டிய நாடகம் பெரு வரவேற்பைப் பெற்றது. (ஐ-173)

## அனுமதி அட்டை கிடைக்காத மாணவருக்கு

தென்மராட்சி, டிசெ 10

மட்டுவில் சமலாசனி வித்தியாலயத்தில் ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் இதுவரை பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக நெல்லியடியில் உள்ள அதிபரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் —

இந்த மாணவர்களுக்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் —

வித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-117-31)

## சமாதானத்துக்கான சுவரொட்டிப் போட்டி

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி போட்டியின் முடிவு திகதி 20. 12. 2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தாளின் அளவு A3(59 CM X 42 CM)

என்பதைக் கவனத்தில் கொள்ளவும். மேலதிக விவரங்களுக்கு 29. 11. 2000 உதயன் பத்திரிகையைப் பார்க்கவும்.

**Y. M. C. A.**

109, கண்டி வீதி, யாழ்ப்பாணம், T. P. 2449.

(81470)

உ

கரணவாய் உச்சில்பதி அருள்மிகு

## புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் திருவிளக்கு பூஜை 100 ஆவது நிறைவுவிழா

கடவுள் ஒளி வடிவினர் என்பதை நமக்கு நினைவூட்டும் கார்த்திகை விளக்கீடும், பௌர்ணமியும் கூடிய கார்த்திகைத் திங்கள் இன்று 25 ஆம் திகதி (10-12-2000) ஞாயிற்றுகிழமை 100 ஆவது விளக்குப் பூசை வழிபாடும் 8 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நடைபெற அம்பாள் திருவருள் பாலித்துள்ளார்.

நிகழ்ச்சிகள்

பிற்பகல் - 2 மணி அம்பாள் வீதி உலா

பி. ப. 2.30 — 4.00 மணிக்கு சொற்பொழிவும்

**பௌர்ணமித் தீபங்கள்**

என்னும் மலர் வெளியீட்டு விழாவும் நடைபெறும்.

பி. ப. 4.00 மணிக்கு திருவிளக்கு வழிபாடு ஆரம்பமாகும்.

பிரதமகுரு:- ஸ்ரீலஸ்ரீ வே. கனகசபேசக்குருக்கள்

அடியார் அனைவரும் திரண்டு வந்து அம்பாளின் அருள்பெற்று ஏகுமாறு வேண்டுகின்றோம்.

வழிபடுவோர் சபை.

[சி/14220]

## வேலணைப் பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபைத் தலைவரினால் கீழ்வரும் கட்டட வேலைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

01. எமது சபையில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்தவர்களும், நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் "இக்ராட் தரம்—9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் 15-12-2000 ஆம் திகதி முற்பகல் 12. 00 மணி வரை கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

03. கேள்விகள் 18-12-2000 ஆம் திகதி முற்பகல் 11. 30 மணிக்குத் திறக்கப்படும் அதே சமயம் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

04. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

05. கேள்விகள் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.

06. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்துத் தலைவர், வேலணைப் பிரதேச சபை, வேலணை என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலிட்டு இரண்டாம் பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 18-12-2000 முற்பகல் 11.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

07. மேலதிக விவரங்களை வேலணைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொடர் இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01 | பயணிகள் தங்குமிடம் அமைத்தல் (மலசலகூட நீர்தாங்கி உட்பட) குறிக்கட்டுவான் | 8,000/- | 500/- |

ந. கருணாகரகுருமூர்த்தி (ஜே. பி., யு. எம்.)
தலைவர்,
வேலணைப் பிரதேச சபை.

(சி/14217)

# மலையக மக்களின் மனித உரிமை மீறலைக் கண்டித்து இன்று பேரணி

கொழும்பு, டிசெ 10

பெருந்தோட்ட சிவில் அமைப்புகளின் ஒன்றியம் மலையக மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து மனித உரிமைகள் தினமான இன்று ஹட்டன் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் பொதுக் கூட்டமொன்றையும் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வுகளில் மலையகத்தைச் சார்ந்த தொழிற் சங்கத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் தலைவர்கள் உட்பட பெருந்தொட்டத் துறையைச் சார்ந்த தமிழ். சிங்கள, முஸ்லிம் மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய பேரணியின் பெருந்தோட்ட சிவில் அமைப்புகளின் ஒன்றியம்பின் வரும் கோரிக்கைகளை முன் வைக்கவுள்ளது.

★ விந்துனுவெவ படுகொலையை விசாரிக்க சர்வதேச ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும்.

★ மலையக மக்கள் மீதும் நாட்டின் ஏனைய மக்கள் மீதும் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

★ மலையக மக்களுக்கு தனியான அடையாள அட்டை வழங்குவதை ஆட்சேபிக்கிறோம்.

★ வாழ்க்கைச் செலவிற்கேற்ப தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும்.

★ தோட்டத் துறை வேலைத்தள பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுக்க திருத்தச் சட்டம் கொண்டு வரப்படவேண்டும்.

★ கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ மலையகத்தின் அனைத்து பொலீஸ் நிலையங்களிலும் பெண்கள், சிறுவர் பிரிவு உருவாக்கப்பட்டு தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். (ஐ)


## முக்கிய அறிவித்தல்

எமது கல்வி நிறுவனத்தில் கல்விகற்று பல்கலைக் கழகம் புக உள்ள மாணவர்கள் அனைவரையும் 12 - 12 - 2000 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு கல்வி நிலையத்தில் ஒன்று கூட்டுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சக மாணவர்கள்
NEW SCIENCE HALL,
NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி, யாழ்நகர்.

(81453)



## பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா?

### நீங்களும் பட்டதாரியாகலாம்...

22 வருடகாலமாகப் பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கிவரும் நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

வருடாவருடம் வர்த்தகத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களில் 100 வீத மாணவர்கள் சித்தியடைந்த பெருமை இந்த நிறுவனத்துக்கே உரியது.

வர்த்தகத்துறையில் முதற் தேர்வு தொடக்கம் பகுதி III வரை இந்த நிறுவனத்திலேயே உள்ளது.

கலைத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் எமது கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களே.

பல்கலைக்கழக பதிவு, பரீட்சைகள் எமது கல்லூரியே முதன் முதல் பொறுப்பேற்று விண்ணப்பங்களை அனுப்பிவந்தது.

மாணவர் அமைப்புக்களையும், மலர் வெளியீட்டையும் கொண்டுள்ள நிறுவனம்.

**2002 கல்வியாண்டுக்கான விரிவுரைகள்**
G. A. Q, 1st in Com. (பேராதனை, யாழ்)
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[இலங்கை வங்கி முன்பாக]

(81480)



## 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை
[10–12–2000]

### திருமதி சின்னத்தம்பி இரத்தினம்
(ஏழாலை மேற்கு)

10 – 11 – 2000 இல் இந்த மண்ணுலக வாழ்வை விட்டு சிவலோக யாத்திரையை மேற்கொண்டிருக்கும் இந்த அம்மையார் சிறந்த பெரிய தம்பிரான் தொண்டரும், தம்பிரானுக்கே தன் பஞ்சகாவியங்களில் (மக்கள் ஒன்றினை சலம் பூவொடு தூபமேற்ற அர்ப்பணித்தும் வந்த விருந்தினரை உபசரித்து வரவிருந்த விருந்தினரை எதிர்பார்த்து இல்லறம் நடத்தியும், ஏழாலைக் கிராம மக்களின் இன்ப துன்பங்களில் பங்குபற்றி பரஸ்பர உறவோடு வாழ்ந்ததும் எம்மால் மறந்துவிட முடியாத பசுமை நிறைந்த நினைவுகளாகும். அன்னாரின் ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலக்க வேண்டுமென்றும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

மரணம் கொடூரமானது என மனிதன் கற்பனையில் அஞ்சுகின்றான். ஆனால் அது அடுத்த பிறவிக்கு ஏதுவான நுழைவாசல் என சமயஞானிகள் கூறுகின்றனர். பிறந்த ஒவ்வொருவரும் இறக்க வேண்டுமென்பது நியதி. அதற்கிணங்க அவர் நிலையும் ஆகிவிட்டது. அன்னாரின் இழப்பினால் துயருறும் பிள்ளைகள், சகோதரன், மருமக்கள், மைத்துனி, பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல நஞ்சுண்டகண்டன் ஆறுதல் அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

"நற்றுணையாவது நமச்சிவாயவே"

ஏழாலை பெரியதம்பிரான் கோயில் பரிபாலன சபையினர்.

(81455)


## கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 10

உரும்பிராய் ஊரெழு உப-அலுவலக எல்லைக்குள் உள்ள சகல பொது நிறுவனங்களும் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த விவரங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

இதற்கான படிவங்களை உப-அலுவலகத்தில் பெற்று அதைப்பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-3)

## நிரந்தர நியமனக்கடிதம்

கொழும்புத்துறை, டிசெ. 10

சமூர்த்தி அதிகார சபையினரால் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்(பயிற்சி)பதவிக்கு நியமனம் பெற்ற யாழ். பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கடந்த வியாழக்கிழமை காலை நிரந்தர நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன. (ஐ-30)

## உதைபந்தாட்டம்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்த ம.க மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஸ்கந்தா வி. கழகமும் சுழிபுரம் விக்ரோறியன் வி. கழகமும் மோதுகின்றன. (இ)

## பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ. 10

வடக்கு--கிழக்கு மாகாண சபையின் இலங்கை தொழில் நுட்பச் சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம், இரண்டாம் திணைக்களப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி 20 ஆம் திகதி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சிவில், பொறிமுறை, மின் மற்றும் திட்டமிடல் தொடர்பான பரீட்சைகளே நடைபெறவுள்ளன. (இ-10)


## தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு 'விற்பனை ஊழியர்' தேவை. க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தியடைந்த 30 வயதுக்கு உட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 20 - 12 - 2000**
விளம்பர இல.– 1153
மே/பா உதயன்

(81464)



## லாலா சோப் சன்சயின் சோப்பை

வேணி களஞ்சியத்தில்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**வேணி பல்பொருள் வாணிபம்**
சத்திரச் சந்தி, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உற்பத்தியாளர்:-
**லாலா சோப் தொழிற்சாலை**
அச்சுவேலி.

(சி/14212)



## விற்பனையாகின்றது

2001 ஆம் ஆண்டுக்கான
**கலண்டர்கள். டயறிகள்**
பல அளவுகளில், விற்பனையாகின்றன.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு

**மகிலன் புத்தகசாலை**
இல. 3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சி/14224)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ். மாவட்ட சமநல சேவைகள் திணைக்கள உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்

**திரு. பொன். குகநாதன் (B. Sc.)**
அவர்கள்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டமையை முன்னிட்டு எமது இதயம் கனிந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, அவர் வாழ்வில் பெரும் உயர்வை அடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும்,
கமநல சேவைகள் திணைக்கள
உத்தியோகத்தர்களும்,
கமநல கேந்திர நிலைய
உத்தியோகத்தர்களும்,
கமநல காப்புறுதிச்சபை
உத்தியோகத்தர்களும்.

யாழ். மாவட்டம்.

(81467)



## இன்று 29 ஆம் நாள் நினைவு தினம்

தாயின் மடியில்: 02- 10- 1928
ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் பாதத்தில்: 13- 11- 2000

**திருமதி இ. இரத்தினம் (ஆச்சி)**

அருள் கல்வி நிலைய அதிபரும், கணித, விஞ்ஞான ஆசிரியருமான

இரா. அருட்செல்வத்தின்

பாசமிகு தாயார் திருமதி இ. இரத்தினம் (ஆச்சி) அவர்களின் ஆத்ம சாந்திக்காக நினைவு கூரும்.

அருள் கல்வி நிலையம்,
ஆண்டு 11,
மாலைநேர மாணவர்கள்.

இணுவில் தெற்கு.
இணுவில்.

(31489)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுவில் கமநல கேந்திர நிலைய
பெரும்பாக உத்தியோகத்தர்

**திரு. பொன். குகநாதன் (B. Sc.)**
அவர்கள்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக
நியமனம் பெற்றமையைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம் தெற்கு
விவசாயிகள் சம்மேளனம்.

(81500)



## நகராட்சி மன்றம்
பருத்தித்துறை

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்-2001

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 27—12—2000 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருள்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்
04. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற் பொருள்கள்
05. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், ஈர்க்கில் முதலியன
06. சுத்திகரிப்பு பிரிவுக்கான கிருமிநாசினிகளும் மருந்துகளும்
07. வேலைப்பகுதி / சுகாதாரப்பகுதிக்குத் தேவையான மண்வெட்டி, அலவாங்கு, பிக்கான் போன்றன.
08. நூலகங்களுக்குரிய நூல்கள்
09. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, கூரைத்தகடுகள், ஓடுகள் முதலியன)
10. திந்தைகள், நிறுந்திட்டும் பொருள்கள் முதலியன
11. கற்கள், மணல்கள்
12. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்
13. வாகனங்களுக்கு பற்றரிகள், ரயர், ரியூப் முதலியன.

### சேவைகள்

01. அச்சிடும் புத்தகங்கள் கட்டுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளொக் தயாரித்தல்
05. கோலவுடை தைத்தல்
06. வாகனங்கள் சேவிஸ் செய்தல்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் சேவைகள் 2001 ஆம் ஆண்டெனக்" குறிப்பிடப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் "தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை" என முகவரியிடப்பட வேண்டும். ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 100 பெறுமதியான தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை என்ற பெயருக்குப் பெறப்பட்ட காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை இணைத்து அனுப்ப வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் எமது நகராட்சி மன்றத்தின் பணிமனையில் நேரடியாகச் செலுத்த முடியும்.

கூறுவிலைகள், பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும். ஆயினும் வேறு இடங்களிலிருந்து கூறுவிலைகள் கோரவும் நகராட்சி மன்றத்திற்கு உரிமை உண்டு.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள்/ சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

சி. கமலேஸ்வரன்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
07—12—2000. (சி/14222)


## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளனர். (இ-10)

## குடும்பஸ்தரைக் காணோம்

வடமராட்சி, டிசெ. 10

படுக்கையில் இருந்த வேளை குடும்பஸ்தர் ஒருவர் காணாமற் போய் விட்டதாக அச்சுவேலி ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் காணாமற் போனவரின் உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்கு நாவற்காட்டைச் சேர்ந்த கதிரன் பரராசசிங்கம் (வயது 55) என்பவரே இவ்வாறு காணாமற் போயுள்ளவராவார். (ம-173-178)

## பாராட்டு விழா

மானிப்பாய், டிசெ. 10

சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற பெரும்பாக உத்தியோகத்தர் பொன். குகநாதனை பாராட்டி கௌரவிக்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் கேந்திர நிலையத் தலைவர் செ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் சு. சுந்தரேசன், வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதேச திட்டமிடல் அதிகாரிகள் எஸ். தேவராஜன், எஸ். செல்வராஜா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டு பாராட்டுரைகளை வழங்குவார்கள். (இ-90)

## தேருக்கு அடிச்சட்டம்

வலி. வடக்கு, டிசெ. 10

மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்தின் புதிய தேருக்கான அடிச்சட்டம் வைக்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.

புதியதேரை சிற்பஜோதி அ. இராசரத்தினம் வடிவமைக்கவுள்ளார். (இ-86)

## தாச்சிப்போட்டி

வலி. வடக்கு, டிசெ. 10

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகத்தினால் அமரர் நல்லதம்பி ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

உடுவில் ஆலடி சிந்து வி. கழகம் எதிர் கோண்டாவில் மறுமலர்ச்சி வி. கழகம். (இ-86)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம்

நெல்லியடி, டிசெ. 10

சட்டவிரோதமான முறையில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை, வீட்டில் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கம்பர்மலை - உடுப்பிட்டியைச் சேர்ந்த கந்தசாமி ஜெயக்குமார் (வயது 38) என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த வல்வெட்டித்துறை பொலீஸார், அவரை கடந்த புதன்கிழமை நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம், மாவட்ட நீதிவான் இந்த அபராதத்தை விதித்தார். (ஐ-109)


## இதோ! வந்து விட்டன!! விற்பனைக்கு

2001 ஆம் ஆண்டுக்கான,
கண் கவர் வண்ணப்படங்களுடன்
கொம்பிளிமென்ற் கலண்டர்கள் விற்பனைக்கு
வந்து விட்டன.

தொடர்பு:-

**பட்டாபி படமாடம்**

இல. 64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-14188)


## சிதம்பர அம்பலவாணர் சுவாமி மானா முதலியார் மடம் பரிபாலன சபை - தொல்புரம்

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் நிகழும் விக்ரம ஸ்ரீ கார்த்திகை மாதம் 17 ஆம் நாள் 02-12-2000 சனிக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு அராலி தெற்கில் உள்ள கிளை மடாலயத்தில் நடைபெற்றது. ஏனெனில் தொல்புர மடாலயத்தில், முன்னாள் வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கா. சந்திரராசா அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் இடம் பெயர்ந்த பொன்னாலை, காரைநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தற்காலிகமாகக் குடியிருந்து வருவதால்;

கூட்டம் சபைத் தலைவர் திரு. சி. அப்புத்துரை இளைப்பாறிய கிராம விதானை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வேளை 20 அங்கத்தவர்களும் சபையின் காணிகளில் பயிர் செய்வோரும் சமுகமளித்திருந்தனர்.

மடாலயத்தில் உள்ள சிவனுக்குரிய ஆராதனைகளும், தேவாரமும் நடைபெற்று மடாலயக் குருக்கள் மூலம் விபூதி பிரசாதம் வழங்கப்பட்டது.

அவ்வேளை மேற்படி பரிபாலன சபையின் தற்போதைய சட்டத்தரணி திரு. இ. வசந்தசேனன் (மானிப்பாய்) அவர்களும் சமுகமாயிருந்தார். சபைத் தலைவரால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

எமது சபையின் ஆலோசகராகவும், நீண்ட காலமாகச் சபையின் வளர்ச்சிக்குக் கருமங்கள் ஆற்றிவந்து அண்மையில் சிவபதமடைந்த சட்டத்தரணி திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்களின் மறைவுக்கும் இதர பரிபாலன சபை உறுப்பினர்களின் மறைவுக்கும் மௌன அஞ்சலியும், இரங்கலுரையும் செலுத்தப்பட்டது.

பின்னர் சபைக் காரியதரிசி அவர்களால் சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சபையின் தனாதிகாரியால் சபையின் நிதி நிலைமைகள் பற்றியும், மடாலயத்தின் தற்போதைய நிலைகள் பற்றியும் விளக்கவுரை வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்த புதுவருட பரிபாலன சபைத் தெரிவு தலைவர் தலைமையில் நடைபெற்றது. இவ்வேளையில் இப் பரிபாலனத்தில் சென்ற 23 வருடங்களாகத் தலைவராக இருந்து திறம்படச் சேவையாற்றிய தலைவர் சி. அப்புத்துரை அவர்களைத் தொடர்ந்தும் சபையின் ஆலோசகராக இருக்கும் வண்ணம் சபையால் பிரேரிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்வருவோர் சபை இருவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: **திரு. அ. கிருபானந்த மனுநீதி, ஆசிரியர்**

உப தலைவர்: **திரு. ஞா. சிதம்பரநாதன் ஜே. பி.**

காரியதரிசி: **திரு. ச. கந்தையா**

தனாதிகாரியும்
மனேஜரும்: **திரு. இ. சண்முகநாதன்**

தர்மகர்த்தா சபை உறுப்பினர்களாக,

1) திரு. சி. வெங்கடாசலபதி, தொல்புரம
2) திரு. நா. நடராசா, அராலி தெற்கு
3) திரு. க. விஜயவேல், கி. சே. அலுவலர், அராலி

ஆகியோர் பொதுச் சபையால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சபையின் உட்துறைக் கணக்காய்வாளராகத் திரு. சி. கையிலைநாதன், திரு. சி. ஞானலட்சுமிபாலன்.

பின்னர், சபையின் அழைப்பின் மூலம் சமுகம் அளித்திருந்த சட்டத்தரணி திரு. இ. வசந்தசேனன் அவர்கள் மடாலயத்தின் சமய, சமூகப் பணிகளையும் எதிர்காலத்தில் திட்டமிட்ட செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

ஈற்றில் சபைக் காரியதரிசி நன்றியுரையுடன் இக் கூட்டம் பிற்பகல் 1.00 மணியளவில் இனிது நிறைவேறியது.

ஞா. சிதம்பரநாதன் ஜே. பி.
தலைவர்

ச. கந்தையா
செயலாளர்

(81497)

# உதயன்

## மனித உரிமை நாள் சிந்தனை

இன்று அனைத்துலக மனித உரிமைகள் நாள். ஒவ்வொரு மனிதனதும் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்; மீறப்படக் கூடாது — அதாவது ஒருவனுக்குரிய உரிமையை அடுத்தவன் பறிக்கக் கூடாது; குடிமக்களின் உரிமைகளைப் பேண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை சகல தரப்பினருக்கும் உணர்த்தும் விதத்தில் டிசெம்பர் பத்தாம் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கீழைத்தேச நாடுகளில் — ஆசிய நாடுகளில் — கடந்த இரண்டொரு தசாப்தங்களிலேயே மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு உண்டானது. அதுவும், தனியாட்சியாளர்கள் மட்டுமன்றி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் மக்களின் அடிப்படை உரிமைகள் உட்பட பல்வேறு உரிமைகளைப் பறித்ததாலும், பேணுவதில்—நடைமுறையில்—அக்கறை கொள்ளாததாலும் விழிப்புணர்வு அதிகமாயிற்று.

இலங்கையும் அந்த நாடுகளில் அடங்கும். அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதற்கென சட்டங்கள் பல இந்த நாட்டிலும் அமுலில் இருப்பது உண்மைதான். தமது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டோர் வழக்குத் தொடர்ந்து நிவாரணம் பெறுவதற்கு வசதி உண்டு என்பதனையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் சில சட்டங்களைப் போர்த்திக் கொண்டு, தனது அதிகாரிகள் மக்களின் மிக மிக அடிப்படையான உரிமைகளை மீறுவதற்கு அரசாங்கம் வசதி செய்து கொடுத்துள்ளது. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பன இதற்கு உதாரணங்கள்,

இந்த இரண்டு சட்டங்களும் தமிழ் மக்களின் வாழ்வுரிமைகளையே தகர்க்கும் நடைமுறைகளை கண்ணாரக்காண்கிறோம் தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் மட்டுமன்றித் தென்னிலங்கையில் உள்ள தமிழர்களும் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்க இயலாது கைகட்டி, வாய் பொத்தி நிற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மலையகத் தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதை — பறிக்கப்படுவதை — கண்டித்து ஹட்டன் நகரில் இன்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடாகியுள்ளது.

இவ்வாறாக, அரசாங்கத் தரப்பே மனித உரிமைகளை மீறிக்கொள்வது — மக்களின் பல குடியியல் உரிமைகளை மீறுவது — பெரும் விசனத்துக்கு உரியதாகும்.

குடியியல் (மனித) உரிமைகள் மீறப்படுவது ஒரு புறமிருக்க, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படாதிருப்பது நாட்டின் இன உறவைப் பெரிதும் பாதித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைகளின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் பிரகடனமானது தேசிய இனங்களின் சிறப்புரிமையான சுய நிர்ணய உரிமையை வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அப்பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கு மதிப்பளிப்பதாகக் கூறும் இலங்கை, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதில் எல்லாத் தரப்புகளும் அக்கறை கொள்ளவேண்டும் இன்றைய சிந்தனை அதனை அனுசரிப்பதாக அமையட்டும்.

# சொல், செயல் வாழ்வு மூலம் நாம் கிறிஸ்துவின் சாட்சியாக வேண்டும்

**ஞாயிறு நற்பிரசாதம்**

'சொல்லிச் செய்வார் சிறியோர், சொல்லாமல் செய்வோர் பெரியோர்; சொல்லியும் செய்யார் கயவர்' என முன்னோர் கூற்றுக்கு ஏற்பவே தான தர்ம கைங்கரியங்களில் இன்றும் பலரது பங்களிப்புகள் வெளிப்படுவதை காண்கிறோம். பெயர் புகழுக்காக அலையும் கூட்டம் ''முதன்மை இருக்கைகளையும், விருந்துகளில் முதன்மையான இடங்களையும் பெற விரும்புகிறார்கள் ''கைம் பெண்களின் வீடுகளைப் பிடுங்கிக் கொள்கிறார்கள், கடும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாக விருப்பவர்கள் இவர்களே'' மாற் 12: 38-44. என கண்டிக்கிறார் நற்செய்தியில் இயேசு கிறிஸ்து.

நோயுற்றவருக்கே வைத்தியன் தேவை. அந்த நோயாளனின் அவலத்தை ஆற்றுப்படுத்த வேண்டியவர்கள் தம் பணித்தளத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் போது தான் நோயாளி குணமடைய முடியும். அதற்கான அர்ப்பணத்தை அளவிட முடியாது இதுபோன்றே தேவை அறிந்து தான, தர்ம கைங்கரியங்களில் தம்மை அர்ப்பணிப்பதில் மாயக் கவர்ச்சியும், போலி வேடங்களும் அர்ப்பணத்துக்கான கையூடல்களும் சுரண்டல் தனங்களாகவே மாறி விடுகிறன. இதனால் அர்ப்பணங்கள் அர்த்தமிழந்தவையாகின்றன அன்பு பரிமாற்றங்கள் சுயநல வெளிப்பாடு ஆகிவிடுகின்றன.

எமக்கு யார் இருக்கிறார்கள்? எம்மால் என்ன செய்ய முடியும்? இன்றைய நெருக்கடியில் தான் தர்மங்கள் செய்வதில் எம்மிடம் எதுவும் இல்லையே எனக் கூறிக் கொள்கிறோம்.

பிறருக்கு உதவ எல்லோரும் கூறிக்கொள்ளும் வார்த்தை பணம், பொருள் என்பதுடன் நின்று விடுகிறது. அல்லாது எமக்கு உதவாத பொருள் மற்றவருக்குக் கொடுப்பதில் விளம்பரப்படுத்தி, பெருமை கொள்ள முயற்சிக்கின்றது. இவை மனித பெலவீனத்தின் வெளிப்பாடுகளே.

சேவைக்கும் உதவிக்கும் மனிதனுக்குத்தேவை முதலில் பணம் அல்ல, நல்ல மனம் தான். அந்த நல்ல மனம்; சேவை உள்ளம் இருந்தாலே தேவை அறிந்து தேடி சேவை புரியவும், கொடுத்துதவவும் எம்மிடம் அன்பு எனும்பெரிய கொடையைப் பகிரவும் முடியும். இவற்றால் என்னநன்மை எனக்கு? என்ற சுயநலப் போக்கு இருப்பவர் செயல் கூட சுரண்டல்சுயநல வெளிப்பாடுகள்தான்

ஆலயங்களிலும் ஆச்சிரமங்களிலும் அர்ப்பணிக்கப்படும் எமது இறை உறவின் வெளிப்பாடு மனித உறவில் வெளிப்பட வேண்டும். அதற்காக எம்மை முதன்மைப் படுத்தவோ, விளம்பரப்படுத்தவோ முனைவதை சுயநலவாதிகள் எனக் கண்டிக்கிறார்.

அங்கீகாரம் புகழ் பெற விரும்பும் சுயநலவாதி எப்படி மற்றவர்களின் முன்மாதிரியாக இருக்க முடியும்? ஆகவே, ஓர் ஏழைக் கைம்பெண் தன் உழைப்பின் பயனை இறை சந்நிதியில் காணிக்கையாகக் கொடுத்தாள். அதைச் சுட்டிக் காட்டிய இயேசு;

''ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்தில் இருந்து போட்டனர். இவரோ தமக்கு பற்றாக் குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே, ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டு விட்டார்'' என்று அவர்களிடம் கூறினார்.

கிறிஸ்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் எம்மிடம் பட்டம், பதவி, பணம் இருந்தால் தான், சேவை செய்ய முடியும் என்பதல்ல நல்ல மனம் கொண்ட மனித உறவுவலுப் பெற இறை உறவு, மனித உறவால் வெளிப்பட வேண்டும் சின்னஞ்சிறிய ஒருவருக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற இறைவார்த்தை எம் மனங்களில் இறை தரிசனத்தை மனித உறவில் காண சொல், செயல், வாழ்வு மூலம் கிறிஸ்துவின் சாட்சிகளாக மாற வேண்டும். ★

யோசப் பாலா

## ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை

# வன்னிக்கான வினாத்தாள்கள் எடுத்துச் செல்லப்பட்டன

வவுனியா, டிசெ. 10

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள்களில் ஒரு தொகுதி நேற்று முன்தினம் அங்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வவுனியாவுக்கான மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆர். விசாகலிங்கம், பிரதி மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் என். சிவகுருநாதன் ஆகியோர் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் வாகனங்கள் மூலம் வினாத்தாள் பொதிகளை எடுத்துச் சென்றனர்.

இதேவேளை — இம்முறை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கான வினாத்தாள் பொதிகள் அனைத்தும் கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களத்தில் வைத்து பொதி செய்யப்பட முன்னர் படையினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என செய்திகள் தெரிவித்தன.

(இ-7-164)

# இன்றைய நிகழ்வுகள்

வலி. தென்மேற்கு, டிசெ. 10

மாகியப்பிட்டி மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறும்.

வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

சனசமூக நிலையத் தலைவர் அ. யோகராஜா தலைமையில் இடம்பெறும் மேற்படி விழாவில் பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். ஞானரட்ணம் அடிகள், பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (இ-185)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ.10

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியன இன்று காலை 8.00 மணிக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இடம்பெறவிருக்கின்றன.

(இ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 10

இணுவில் மானிப்பாய் வட்டம், சுன்னாகம் லயன்ஸ் கழகங்கள் இணைந்து தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அறநிதிய சபையின் அனுசரணையுடன் நடத்தும் வசதி அற்ற மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8-00மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் இடம் பெறும்.

இந்தப் பரிசோதனையில் கண்டு பிடிக்கப்படும் கண் பார்வைக் குறைபாடுகளுக்கு மாணவர்களுக்கான கண்ணாடிகளை துர்க்கா தேவஸ்தான அறநிதிய சபை வழங்க உள்ளது.

★ ★ ★

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டிலான ஞானராஜசேகரனின் 'பாரதி வீடியோக் காட்சியும் கலந்துரையாடலும் இன்று காலை 9 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம் பெறவுள்ளன.

(இ-3)

★ ★ ★

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் ஆரம்பகால உறுப்பினர் சபைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் இடம் பெறும். (ம-5)

★ ★ ★

சங்கரத்தைப் பிரிவு செயலணிக் கூட்டம் இன்று பிற்பகல் 4. 30 மணிக்கு சின்னம்மா வித்தியாசாலை மண்டபத்திலும்—

சங்கானை கிழக்குப் பிரிவு செயலணிக் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் சிலன் கல்வி நிலையத்திலும்—

தொல்புரம் கிழக்குப் பிரிவு செயலணிக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தொல்புரம் விக்கினேஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

வலிகாமம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சமூர்த்தி செயலணிக் குழுக்கள் அமைப்பதற்கான கூட்டங்கள் வலய முகாமையாளர்கள்தலைமையில் நடைபெற்று வருகின்றன.

வட்டுத் தென் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு செயலணிக் குழுக் கூட்டம் வட்டு மத்திய கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில்நடைபெறவுள்ளது.

★ ★ ★

வடமராட்சி, டிசெ. 10

கொக்குவில்-திவகம் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் வைத்திய முகாமும் மற்றும் அபிவிருத்தித் திட்டத்துக்கான கருத்தரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்துக்குபிரதம விருந்தினராக லயன் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ். பத்மநாதன் கலந்து கொள்வார்.

கண்பரிசோதனை, பொது வைத்தியபரிசோதனை வைத்திய முகாமில் இடம்பெறும், அபிவிருத்திக் கருத்தரங்கில் புங்குடுதீவு குடிதண்ணீர்பிரச்சினை வைத்திய சாலையை இயங்கச்செய்தல், தும்புத் தொழிற்சாலை ஆரம்பித்தல் ஆகிய திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படும்.

(இ-173-10)

**உதயவாக்கு**

சேர்ப்பதைவிடசேமிப்பதே பெரிய கலையாகும்.

— டேவிற்

# நெடுந்தீவில் தலைமைத்துவ தகமைப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 10

வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஏற்பாடு செய்துள்ள தலைமைத்துவ தகைமைப் பயிற்சி வகுப்பு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நான்கு தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறும் இந்தப்பயிற்சி வகுப்புகளுக்கு நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமை வகிப்பார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் தலைவரும் கலாசார சபையின் பொருளாளருமான புலவர் ஏ. டபிள்யூ அரியநாயகம் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகவும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. அரசரட்ணம், மகா வித்தியாலய அதிபர் திருமதி சா. கிருஷ்ணதாஸ், ஈ பி.டி.பியின் பொறுப்பாளர் கே. மோகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும்—கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி மாவட்ட அலுவலர் செ. செல்வரட்ணம், நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத் தலைவர் நா. சங்கரப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர்.

(இ 7)

# நாளை

கார்த்திகை 26

திங்கட்கிழமை

திதி: பூரணை பிற்பகல் 3.49 வரை.

நட்சத்திரம்: ரோகிணி முற்பகல் 11.49 வரை.

பூரணை விரதம்

சுபநேரம்: 12 20 - 1 50

" " : 7.50 - 9 20

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பாதீனியம்.....

(பாதீனியம் குறித்து நேற்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

(ii) கட்டுரை ஆசிரியர் மேற்கொண்ட ஆய்வுகளின் போது கிடைத்த தரவுகள்:-

1. *திகதி:-* 27.09.2000. நேரம் - காலை 10.00 மணிமுதல்.
2. *இடம்:-* நிலாவரை, கேணியை அண்டிய பிரதேசம்.
3. *காலநிலை:-* ஆரம்பத்தில் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. பின்னர் படிப்படியாக பிரகாசமான வெய்யில். இடையிடையே முகில் சூரியனை மறைத்தது. காற்று ஓரளவு அதிகமாக வீசிக்கொண்டிருந்தது. ஆய்வுசெய்த இடம் குளிர்ச்சியாக இருந்தது. திறந்த வெளியில் வெப்பம் அதிகமாக இருந்தது.
4. *மண்:-* இருவாட்டி செம்மண். உக்கும் இலைச் சருகு நிறைய உண்டு சில இடங்கள் கற்பாங்கானது; இறுக்கமானது. அண்மைக காலத்தில் பெய்த மழை காரணமாக மண் ஈரமாகவிருந்தது.
5. *பொது விவரணை:-* ஆய்வு மேற்கொண்ட இடத்தில் மரங்கள் பரவலாகக் காணப்பட்டன. அதனால் நிழல் சார்ந்ததாகவும், குளிர்ச்சியாகவும், ஈரலிப்பாகவும் காணப்பட்டது. ஏனைய இடங்களிலும் மரங்கள் சிதறலாகக் காணப்பட்டன. கேணியை அண்டி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பாதீனியம் நன்றாக நிலையூன்றியுள்ளது; பரவலாக உள்ளதுடன், ஆட்சியுள்ளதாகவும் உள்ளது. மற்றும் இடங்களிலும் பாதீனியம் காணப்பட்டது - சில இடங்களில் நெருக்கமாகவும், சில இடங்களில் ஐதாகவும். கற்பாங்கான இடங்களில் பாதீனியம் அருமையாகவே காணப்பட்டது. பாதீனியத்தைப் பொறுத்தவரை முளைத் தாவரங்கள், இளம் தாவரங்கள், பூக்க ஆரம்பித்துள்ள தாவரங்கள், முதிர் தாவரங்கள் ஆகிய பல நிலைகளிலும் காணப்பட்டன. இறந்த தாவரங்கள் அருமையாகவே காணப்பட்டன. முளைத்தாவரங்களின் இலைகள் அகலமாகவும் சதபத்திர ஒழுங்கிலும் (றோசாவுரு) நிலத்தில் படிந்த நிலையிலும் காணப்பட்டன. இது ஏனைய தாவர இனங்களின் முளைத்தலைப் பாதிக்கும் என்பதைக் கோடுகாட்டுவதாயுள்ளது. இதற்குச் சான்றாக பாதீனியம் முளைத் தாவரங்கள் அதிகமாவும் நெருக்கமாகவும் உள்ள இடங்களில் ஏனைய தாவர இனங்களின் முளைத் தாவரங்கள் காணப்படவில்லை. அல்லது மிக அருமையாகவே காணப்பட்டன.

ஆய்வு மேற்கொண்ட இடத்தில், பாதீயனித்தைத் தவிர, ஏனைய தாவர இனங்களைப் பொறுத்தவரை 59 தாவர இனங்கள் காணப்பட்டன. இவற்றுள் பெரும்பாலானவை மூலிகைத் தாவரங்களாகும். சில அருமையாகக் கிடைக்கும் சித்தமருத்துவ மூலிகைகள் என்பது குறிப்பிடத்தக்கது. (இவ்வாய்வுடன் தொடர்பாகவும், இதற்கு முந்தைய ஆய்வுகளுடன் தொடர்பாகவும் தயாரித்த தாவர இனங்களின் நிரல் (**CHECK LISTS** கைவசமுண்டு.) ஆய்வு மேற்கொண்ட இடத்தில் புற்கள் அருமையாகவே காணப்பட்டன. மூன்று இனங்கள் மாத்திரமே காணப்பட்டன. இவையும் சிதறலாகவே காணப்பட்டன. ஒன்றிலும் பூக்கள் காணப்படவில்லை. அதனால் இனங்காண முடியவில்லை. கோரை வகையை (**SEDGES**)ப் பொறுத்தவரை ஒரேயொரு இனம் மாத்திரமே காணப்பட்டது -

*தோட்டக்கோரை:-* **CYPERUS ROTUNDUS**

கேணியின் சுவர்களிலும் படிகளிலும் பல தாவர இனங்கள் காணப்பட்டன. பாதீனியமும் நிறையக் காணப்பட்டது. ஒரு பன்ன இனமும் காணப்பட்டது. சாதாரணமாக, ஆனால் சுவரில் மாத்திரம் அண்மையில் பெய்த மழை காரணமாக ஈரலுருத் தாவரஇனமுமொன்று பரவலாகக் காணப்பட்டது - சிறப்பாக நிலம் கற்பாங்காகவுள்ள இடங்களில் வான்வகைக்குரிய பன்னங்களும் ஈரலுருத்தாவரங்களும் குடாநாட்டில் மிக அருமையாகவே காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. உக்கும் இலைகள் உள்ள இடங்களில், மிகச் சிறிய கபிலநிறக் குடையுள்ள நெடிய காம்புள்ள, ஒரு காளான் இனமும் காணப்பட்டது.

நாங்கள் ஆய்வை மேற்கொள்ள ஆரம்பித்த சமயம், சில உள்ளூர் கமக்காரர்களும் அவ்விடம் வந்தார்கள். நாங்கள் செய்ய இருப்பதை விசாரித்து தாங்களும் உதவ முன்வந்தார்கள் - கமக்காரர்களிடம் எதிர்பார்க்கக்கூடிய ஒரு விடயம்தான்.

பாதீனியத்தைக் காட்டி "இதைத் தெரியுமோ? " என்று அவர்களிடம் கேட்டபொழுது, "ஓ, தெரியுமே! வீதிக்கு அப்பால் உள்ள வீட்டில் இந்தியப்படை இருந்தது. அவர்களுடைய செம்மறியாடுகளும் இருந்தன. அங்குதான் இது முதலில் தோன்றியது. பின் வெளியேயும் பரவியது. தோட்டங்களிலும் உண்டு'' என்றார்கள்.

அவர்களுக்குப் பாதீனியம் தெரிகின்றது; புகுந்த விதமும் தெரிகின்றது. ஆனால் இதுவொரு பிரச்சினைக்குரிய செடி என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களிடம் இதைப் பற்றி எடுத்துக் கூறினோம். இவர்களின் கலந்துரையாடலிருந்து கமக்காரர்களுக்குப் பாதீனியம் பிரச்சினைக்குரியது என்பது தெரிந்தால் பிறர் உதவியில்லாமல் அவர்களே இதைக் கட்டுப்படுத்த முன்வருவார்கள் என்பதனை அறிந்துகொண்டோம். பல இடங்களில் உள்ளூர் வாசிகளிடமிருந்து தெரிந்துகொண்டதிலிருந்தும், எமது அனுபவம், ஆய்வுகள் முதலியவற்றின் அடிப்படையிலும் பாதீனியம் இலங்கையில் புகுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் இந்தியப்படை (**I.P.K.F.**) என்பது புலனாகின்றது.

6. *ஆய்வு மேற்கொண்ட முறை:-*

பிரதேசத்திலுள்ள பிற தாவர இனங்களைக் கண்டறிவதற்காக ஒரு பொதுவான பண்பறி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தாவர நிரல் தயாரிக்கப்பட்டது. பிரதேசத்திலுள்ள தாவரப் பல்வகைமையையும் (**PLANT DIVERSITY**) இது புலப்படுவதாய் உள்ளது. பின் ஒரு பத்து மீற்றர் சதுரம் அளந்து குறிக்கப்பட்டு அளவறி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. எழுந்த படியான நாற்பக்கவுரு மதிப்பீட்டு முறை (**RANDOM QUADRAT SAMPLING METHOD**) மேற்கொள்ளப்பட்டது. நாற்பக்கவுரு அளவு- 1 மீற்றர் சதுரம். நாற்பக்கவுரு விழுந்த இடத்தில் பாதீனியத்தின் எண்ணிக்கையும் (தொகை மதிப்பீடு), மூடு பரப்பும் எடுக்கப்பட்டன. முளைத்தாவரங்கள் மற்றும் இறந்த தாவரங்களின் எண்ணிக்கைகள் தனியாகவும் எடுக்கப்பட்டன. பிறப்பு - இறப்பு விகிதாசாரத்தைக் காட்டுவதாக இது அமையும். ஒவ்வொரு எறிகையிலும் நாற்பக்கவுருவில் உள்ள ஏனைய தாவர இனங்களின் எண்ணிக்கையும் எடுக்கப்பட்டது. இவற்றின் மூடுபரப்பு எடுக்கப்படவில்லை.

7. *நாற்பக்கவுரு அளவீடுகள்:-*

நாற்பக்கவுருவின் அளவு-ஒரு சதுர மீற்றர்.

| நாற்பக்கவுரு எண் | இனங்களின் எண்ணிக்கை | பாதீனியம் முளைகளின் எண்ணிக்கை | பாதீனியம் முழு எண்ணிக்கை | பாதீனியம் மூடுபரப்பு | பாதீனியம் இறந்த தாவரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 4 | 54 | 80% | - |
| 2 | 3 | - | 19 | 60% | - |
| 3 | 5 | - | 28 | 95% | - |
| 4 | 6 | 14 | 27 | 40% | - |
| 5 | 6 | 9 | 26 | 65% | - |
| 6 | 4 | 7 | 20 | 70% | 1 |
| 7 | 9 | - | 1 | 0% | - |
| 8 | 6 | 11 | 11 | [illegible] | 1 |
| 9 | 1 | - | 62 | 85% | 4 |
| 10 | 7 | 250 | 278 | 100% | - |

*கணிப்புகள் - ஆய்வுக்குட்படுத்திய பிரதேசத்திற்கு:-*

பிரதேசத்தில் பாதீனியத்தின் தொகை -556/10 = 55.6

பிரதேசத்தில் பாதினியத்தின் ஆட்சி -602/10 = 60.2 வீதம்

பிரதேசத்தில் இறந்த தாவரங்கள் -7/10 = 0.7 வீதம்

8. *அவதானங்களும் முடிவுகளும்:-*

(i) தரவுகளிலிருந்து தொகைக்கும் (தாவர எண்ணிக்கை) மூடுபரப்பிற்கும் தொடர்பில்லை என்பது புலப்படுகின்றது. அதனால் ஆட்சியை அறிவதற்கு தொகை மதிப்பீட்டைக் காட்டிலும் மூடுபரப்பு மதிப்பீடு ஏற்புடையது என்பது புலனாகின்றது.

(ii) தரவுகளிலிருந்து பிரதேசத்தில் பாதீனியம் ஆட்சியை மேற்கொண்டுள்ளது என்பது புலனாகின்றது.

(iii) அண்டிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட கண் மதிப்பீடுகளிலிருந்து பாதீனியம் ஒரு பிரச்சினைக்குரிய களையாக மாறுகின்றது என்று உணரக் கூடியதாக இருந்தது.

(iv) தரவுகளிலிருந்து பாதீனியம் அது உள்ள பிரதேசத்தின் தாவர இனப் பல்வகைமையைப் பாதிக்கக் கூடியது, பாதித்துள்ளது, அதனால் பிரதேசத்தின் சூழலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று உய்த்தறிய வாய்ப்புள்ளதாகத் தெரிகின்றது.

(v) கமக்காரர்களுக்கு பாதீனியத்தைத் தெரியும், ஆனால் அது ஒரு பிரச்சினைக்குரிய களை என்பது தெரியாது. அதனால் தொடர்புபட்ட தகவல்களை கமக்காரர்களுக்குத் தெரியப்படுத்துவது அவசியம். பொதுமக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

(vi) தகவல்களிலிருந்து பாதீனியம் இலங்கையில் புகுவதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர்கள் I.P.K.F. என்பது புலனாகின்றது.

தொடர்ந்து, காலத்துக்குக் காலம் செய்யும் ஆய்வுகள் மேலும் பல தகவல்களைத் தரும்.


**REFERENCES-**

01. PERSONAL NOTES AND EXPERIENCES.
02. B.C.C.S. GREEN VERSION- HIGH SCHOOL BIOLOGY.
03. COX-READINGS IN CONSERVATION ECOLOGY.
04. RUTTNER- FUNDAMENTALS OF LIMNOLOGY.
05. CLARKE- ELEMENTS OF ECOLOGY.
06. KORMONDY- CONCEPTS OF ECOLOGY.
07. OOSTING- THE STUDY OF PLANT COMMUNITIES.
08. ODUM-ECOLOGY.
09. ATPUTHANATHAN-M, K.S.KUGATHASAN, K.SELVAVINAYAGAM, K.SHANMUGASUNDERAM, K.PONNAMPALAM & N.SUNDARAMOORTHY-FIELD WORK GUIDE.
10. KUGATHASAN.K.S.-MANGROVES OF THE LAGOON.
11. KUGATHASAN.K.S. & MRS.J.NANTHAKUMAR - "நமது நாட்டுக்குள் புகுந்திருக்கும் அந்நியர்!" "பாதீனியம்- என்ற வடிவில் வரும் பேராபத்து!!" - உதயன் 05.07.2000


**வாசக நேயர்களின் கவனத்திற்கு!**

பாதீனியம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று 10.12.2000 ஞாயிற்றுக்கிழமை முழுநிலா நாளன்று பி.ப 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாதீனியம் தொடர்பான பொருட்காட்சியும் அங்கு இடம்பெறும்.

## சந்திரபுர ஸ்கந்தவரோதய மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.10

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தின் தரம் ஒன்பது மாணவர்கள் அனைவரும் தமது மாவட்டப் பொதுப் பரீட்சைப் புள்ளிகளையும், தமது இரண்டாம் தவணை மூன்றாம் தவணைக்கான கணிப்பீட்டுப்புள்ளிகளையும் நாளை மறுதினம் 12ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் சமர்ப்பிக்குமாறு அதிபர் மு.பாலசுப்பிரமணியம கேட்டுக்கொள்கிறார்.

(இ)

## இளைஞனைக் காணவில்லை என முறையீடு!

யாழ்ப்பாணம்,டிசெ.10

மிருசுவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது சங்குவேலியில் வசித்து வந்த இளைஞனைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கெற்பலி மத்தி, மிருசுவில் வடக்கைச் சேர்ந்த அன்னராசா ஜெயரூபன்(வயது22) என்பவரே காணாமற் போனவராவார்.

தற்பொழுது வசித்துவரும் அந்திரான் சங்குவேலியில் உள்ள வீட்டிலிருந்து கடந்த 2 ஆம் திகதி புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)


Centre for Advanced Computing & Information Technology

DCS

COLLEGE OF COMPUTER TECHNOLOGY

(British ACP Recognized Training Centre)

124/2, Palaly Road, Thirunelvely. T.P No: 021-2596 e-mail: dcsjaf@sltnet.lk P. O Box : 144 - Jaffna N. M. M. V Road, Nelliady.



2001/2002 கல்வியாண்டுக்குரிய 5000 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்.



இப்புலமைப்பரிசில் திட்டத்தில் இக்கல்வியாண்டுக்காக பின்வரும் கணனி கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.

- *Diploma in Office Management (6 Months)*
- *Desktop Publishing & Presentation Graphics / DTP (9 Months)*
- *Computerized Financial Accounting (9 Months)*
- *National Diploma in Applied Computing / NDAC (1 Year)*

மேற்படி கற்கைநெறிகளுக்கு 15 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி கற்கை நெறிகளுக்கான நுழைவுத்தேர்வு போட்டிப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் 5000 மாணவர்கள் இலவச / சலுகை அடிப்படையில் கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**விண்ணப்பப்படிவம்**

விண்ணப்பப்படிவங்களை எமது யாழ்ப்பாண, வடமராட்சி கிளைகளில் அல்லது கீழ்வரும் புத்தகசாலைகளில் / கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- மண்டேலா புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழப்பாணம்
- சிவநாதன் கபே, நல்லூர்
- லக்கி பத்திரிகை நிலையம், இருபாலை சந்தி
- துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்
- கலாஜோதி புத்தகசாலை, சங்கானை
- சஜீபன் பல்பொருள் வாணிபம், பண்டத்தரிப்பு
- மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- போஸ்கோ புத்தகசாலை, யாழ்ப்பாணம்
- ஞானம் புத்தகசாலை, நாச்சிமார் கோவிலடி.
- கனகா பத்திரிகை அகம், திருநெல்வேலி சந்தி
- பத்திரிகை விற்பனை முகவர், இணுவில்
- நாயகபாலன் புத்தக நிலையம், மானிப்பாய்
- வலம்புரி புத்தகசாலை, வட்டுக்கோட்டை
- சூர்யா பார்மசி, அச்சுவேலி

மற்றும் வடமராட்சியின் பிரபல புத்தகசாலைகளில்...

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் ரூபா 100/= பரீட்சைக்கட்டணத்துடன் காரியாலத்தில் நேரடியாக ஒப்படைக்கவும், அல்லது ரூபா 100/= காசுக்கட்டளை Director, DCS என்றும் பணம் பெறும் நிலையம் Colombo GPO எனவும் குறிப்பிட்டு மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பாடசாலை மாணவர்களுக்கு**

- பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கட்டணம் இன்றி இலவச நுழைவுத்தேர்வுப் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும்.
- பாடசாலையூடாக விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெறாத மாணவர்கள் எமது அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
- பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் நேரடியாக எமது அலுவலகத்தில் ஒப்படைக்கவும், அல்லது தபால் மூலம் எமது கிளைகளுக்கு அனுப்பவும்.

**கற்கை நெறி ஆரம்பம்**

கற்கை நெறிகள் யாவும் மாணவர்களின் வசதிகருதி *January 2001, April 2001, September 2001* ஆகிய மூன்று பிரிவுகளாக ஆரம்பமாகும். மேலும் இப்பிரிவுகள் யாவும் வார, வார இறுதி நாட்களில் காலை, மாலை வகுப்புகளாக நடைபெறும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 05 JANUARY 2001**

...நூலகம் யாழ்ப்பாணம்

# நிவாரணம் வழங்கும் பணியை வெளிநாடுகளிடம் விட்டுவிடுக!

## ஆனந்தசங்கரி அரசிடம் வேண்டுகோள்

கொழும்பு,டிசெ.10

வடக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியாவிட்டால் அரசு பதவி விலக வேண்டும். நிவாரணம் வழங்கும் பணியை சர்வதேச நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கணக்கு வாக்குப் பணப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் போதிய நிவாரணம் இன்றிக் கஷ்டப் படுகின்றனர். குறிப்பிட்ட அளவு நிவாரணம் தாமதமாக வழங்கப்பட்டு வருகின்றது.

போதிய நிவாரணத்தை அரசு வழங்க வேண்டும். அப்படி முடியாவிட்டால் அரசு பதவி விலகவேண்டும். நிவாரணம் வழங்க முடியாது விட்டால் நிவாரண விநியோகத்தை சர்வதேச நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும் - என்றார்.

(ஐ-3)

## கசிப்பு விற்பனை வழக்கு:

# அபராதம் செலுத்தத் தவறியவருக்கு மூன்று மாதக் கடூழியச் சிறை

நெல்லியடி,டிசெ.10

சட்ட விரோதமான முறையில், வீடு ஒன்றில் கசிப்பு, சாராயம் போன்றவைகளை விற்பனை செய்த குற்றத்திற்காக, நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையைச் செலுத்தத் தவறிய குடும்பஸ்தர் ஒருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், மூன்று மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபரான, புலோலி மத்தியைச் சேர்ந்த நடராசா - வேலுசாமி (வயது 38) என்பவருக்கு ஏற்கனவே நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையில், 16ஆயிரம் ரூபாவை அவர் இதுவரை மன்றில் செலுத்தத் தவறியிருந்தார்.

குறித்த சந்தேக நபரின் வழக்கு விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிவான் பொ. குமாரசாமி முன்னிலையில் நடைபெற்ற சமயம், இவருக்கு 3 மாத கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

(ஐ-109)

## சுழியில் சிக்கி சிப்பாய் மரணம்

நெல்லியடி,டிசெ.10

குடாக் கடல் வழியாக நடந்து சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர், சுழியில் அகப்பட்டு, பரிதாபமாக மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வாரம் தொண்டமனாறு சின்னக்கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது.

கடற்கரைப் பகுதியில் உள்ள காவலரணில் பணிபுரிந்து வந்த தொண்டமனாறு இராணுவ முகாமைச் சேர்ந்த இந்தச் சிப்பாய் மறுநாள் தனது ஊருக்குச் செல்லும் பொருட்டு உடுப்பிட்டியில் உள்ள கடைஒன்றில் பொருள்களைக் கொள்வனவு செய்த பின் இக்குடாக் கடல் வழியாக, காவலரண் பகுதிக்கு நடந்து சென்ற சமயமே சுழியில் அகப்பட்டு மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கையில், பை ஒன்றைத் தாங்கிய நிலையில் கிடந்த இவரது சடலம் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டிருந்தது.

(ஐ-109-117)

## வெள்ளவத்தையில் கைக்குண்டுகள் மீட்பு

கொழும்பு,டிசெ.10

வெள்ளவத்தை டபிள்யு.ஏ.டி. சில்வா மாவத்தையில் உள்ள வெற்றுக்காணி ஒன்றில் இருந்து நான்கு கைக்குண்டுகளை நேற்று மீட்ட வெள்ளவத்தை பொலீஸார் அவற்றைச் செயலிழக்கச் செய்தனர்.

இவற்றில் இரண்டு கைக்குண்டுகள் இராணுவத்தினர் பயன்படுத்தும் ரகத்தைச் சேர்ந்தவை எனவும் இரண்டு கைக்குண்டுகள் புதிய ரகத்தைச் சேர்ந்தவை எனவும் தெரிவித்த பொலீஸ் பொறுப்பதிகாரி இவை விடுதலைப்புலிகளால் இந்தப் பகுதிக்கு எடுத்துவரப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

(ம-6)

## கிளினிக் கட்டடம் திறப்பு

நெல்லியடி,டிசெ.10

மந்திகை மருந்துவமனையில் சுமார் 40லெட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட, கிளினிக் சிகிச்சைக்கான கட்டடம் நேற்றுக்காலை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளையினால் திறந்துவைக்கப்பட்டது.

(ம-109)


- பாடசாலை உபகரணங்கள்
- கொப்பி வகைகள்
- எழுது பொருள்கள்
- காகிதாதிகள்

தரமாகவும், நியாயமான விலையிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

அற்புதா ரேடிங் கொம்பனி

198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)

(சி14235)



# சங்கானை வர்த்தகர் சங்கம்
## அறிவித்தல்

இடம்பெயர்ந்த மக்களின் நன்மை கருதியே 20-11-2000 சங்கானை வர்த்தகர்களிடம் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திரு.ந.திரிலோகநாதன் அவர்கள் கடைகளைத் திறக்கும்படி ஆலோசனை கேட்டிருந்தார். அது மாத்திரமின்றி அன்றையதினம் தொழிலாளர்கள் இல்லாது கடை உரிமையாளர்கள் மட்டும் கடை திறந்து சேவை செய்யும்படியும் கேட்டுக்கொண்டார். அவரின் ஆலோசனையின்படி சகல வர்த்தகர்களும் ஏகமனதாகச் சம்மதம் தெரிவித்தனர்.

சங்கானை வர்த்தகர்கள், ஊழியர்கள் மகஜர் சம்பந்தமாக வெளியான தகவல்களுக்கும் எமக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

(81523) சங்கானை வர்த்தகர் சங்கம்.



உ
சாயிராம்
ஓம் விராட் விஸ்வ் ப்ரம்மனே நமஹ

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் நாளை கார்த்திகைத் திங்கள் 26 ஆம் நாள் (11.12.2000) திங்கட்கிழமை முற்பகல் 9.40 மணி முதல் 11.20 மணி வரையுமுள்ள சுப முகூர்த்த வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி
வைஷ்ணவி அவர்களுக்கு

எமது 'ஸ்ரீவாசம்' இல்லத்தில் பூப்புனித நீராட்டு ருதுசாந்தி செய்ய இறையருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதோர் இதனை அழைப்பிதழாக ஏற்றுக் கொள்ளவும்.

சிவாஜினி நகை மாளிகை
105, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி ச.சண்முகராசா
திருமதி இராஜமனோகரி
'ஸ்ரீவாசம்'
கருவேலடி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பேரன்மார் { S. K. சோமசுந்தரம் - கொக்குவில்
வே. சுப்பிரமணியம் - நாவற்குழி

(81528)



# கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவன் த.மதீசன் அவர்களின் அன்புத் தந்தையார்

**வே.தபோதநாயகம்** அவர்களது

மறைவையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம் ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தரம் 9A மாணவர்கள்,
யாழ்.இந்துக் கல்லூரி.

(C/14236)



# கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக 3ஆம் வருட
கலைப்பீட மாணவி தவராணி அவர்களின் அன்புச் சகோதரன்

**சுப்பிரமணியம் கேதீஸ்வரன்** அவர்கள்

ஜேர்மனியில் (08-12-2000) அகால மரணம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(81526) 3ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்.



# நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு விஷேட சலுகை





பல் கட்டுதல், பற்களுக்குக் கிளிப் பொருத்துதல் மற்றும் கண்ணாடி வழங்குதல் ஆகியவற்றுக்கே விசேட சலுகை அடிப்படையில் செய்யப்படுகிறது.

இச்சலுகையைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

எரிக்ஸனோஸ்

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No: 2486

91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

- சீனமுறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரால் சிறந்த தரமான சங்குப் பற்கள் அழகிய முறையில் கட்டிக் கொடுக்கப்படும்.
- சிறப்பான முறையில் மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும்.
- கண் பரிசோதித்தும் கண்ணாடி வழங்கப்படும்.

(C/14228)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின்

# முழு நிலா நாள் நிகழ்வு

சுடர்ஒளி

நிறுவன ஆதரவில்
தொண்டமானாறு வெளிக்கள நிலையத்துடன்
இணைந்து நடத்தும்

## பாதீனியம் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - குமாரசுவாமி மண்டபம்
காலம் : இன்று 10.12.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி (புதிய நேரம்)
தலைவர் : திரு.க.சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.
தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்)
ஒருங்கிணைப்பாளர் : திரு.க.சி.குகதாசன்
(யாழ். இந்து முன்னாள் அதிபர்; தலைவர், தொண்டமானாறு
வெளிக்கள நிலையம்)

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 3.00 - 3.30 | காட்சிப் பொருள்களைப் பார்வையிடல் |
| 3.30 - 3.45 | தலைமையுரை |
| 3.45 - 4.15 | "பாத்தீனியமும் சூழலும்" திரு.க.சி.குகதாசன் M.Sc. |
| 4.15 - 4.45 | "பாத்தீனியம் - உருவவியல்" திருமதி ஜெயந்தகுமார் M.Phil. (சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்) |
| 4.45 - 5.15 | "பாத்தீனியமும் விவசாயமும்" திரு.கு.மிகுந்தன் M.Phil. (தலைவர், விவசாய உயிரியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) |
| 5.15 - 5.45 | கலந்துரையாடல் |
| 5.45 - | நன்றியுரை: நிறைவு |

(நிகழ்வுகள் நேர ஒழுங்கின்படி நடைபெறும்)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். குடாநாட்டின் விவசாயத்துறை அதிகாரிகளையும் மற்றும் கமக்காரர்களையும் வருகை தருமாறு விநயத்துடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

(C/14184)

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொழில் துறைகளில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து சம்பூரில் இருந்து புறப்படும் ஊர்வலம் சேனையூர் மகா வித்தியாலயம் வரை நடைபெறும். அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடத்தும் ஊர்வலம் திருகோணமலை நகரப்பகுதியில் இடம்பெறும். முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கமும் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹட்டனிலும் பேரணி ஒன்று நடைபெற உள்ளது. (ம-6)

## 50 ஆண்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செய்யப்பட்ட இந்த டாங்கிகள் ஆர்.பி.ஜி. 7இன் தாக்குதலுக்குக் கூட தாக்குப் பிடிக்கக்கூடியவை அல்ல என்று அவற்றைப் பார்வையிடச் சென்ற இராணுவ அணியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

புலிகள் வசம் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் (AGTM) இருப்பதை நன்கு அறிந்து கொண்டுள்ள இராணுவம் ஐம்பது ஆண்டுகள் வரை பழைய இந்த வகை டாங்கிகளைக் கொள்வனவு செய்தது ஏன்?

பரந்தனில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு டாங்கிகளை 1999 செப்ரெம்பர் 24 ஆம் திகதி புலிகள் தாக்கி அழித்த போது இந்த ஏவுகணைகள் புலிகளிடம் இருப்பது உறுதியாயிற்று.

இந்த ஏவுகணைகள், 'கொள்வனவு செய்பவரே இறுதிப் பாவனையாளர்' (End User) என்ற நிபந்தனையுடனேயே நாடுகளுக்கு விற்கப்படுகின்றன. அவை எப்படி சர்வதேச சந்தையிலிருந்து புலிகளுக்குக் கிடைத்தன என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

### 'சுகன்யா' கப்பலின் நிலை

அண்மையில் இந்தியாவிடமிருந்து 'சுகன்யா' கரையோரக் கப்பல் கொள்வனவு செய்யப்பட்டது. நவீன கருவிகள், பீரங்கிகள் பொருத்தப்பட்டு அது பயன்பாட்டுக்கு வர இன்னும் ஆறு மாதங்கள் செல்லலாம். அதில் சுடுகலன் கட்டுப்பாட்டுக் கருவி (Fire Control System) இல்லை. இவ்வகைக் கப்பலுக்கு இக் கருவி இன்றியமையாதது. இரண்டு கோடி டொலர்களுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட இந்தக் கப்பலுக்கு இக் கருவியைப் பொருத்த மேலும் 45 லட்சம் ஸ்ரேலிங் பவுண் தேவைப்படும்.

ஆனால் -

இதே காலப்பகுதியில் 'சுகன்யா' ரகத்தை விடவும் மிகவும் தரமானதும் 76 மில்லிமீற்றர் பீரங்கிகள் பொருத்தப்பட்டதுமான இரண்டு கப்பல்களை ஒவ்வொன்றும் இரண்டு கோடி 60 லட்சம் டொலர்களுக்கு வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன வந்தது.

வெளியே கூற முடியாத - நியாயமற்ற காரணங்களுக்காகவே - ரஷ்யக் கப்பல் நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகின்றனர்.

'சுகன்யா' கப்பல் மில்லியன் கணக்கான டொலர்களை விழுங்கும் 'வெள்ளை யானை' என இராஜதந்திரிகள் விமர்சிக்கின்றனர்.

இஸ்ரேல் தயாரிப்பு எஸ்.ஏ.ஆர் .4 ரக - பல்வகைப் பயன்பாடுள்ள - கப்பல் 2 கோடி 70 லட்சம் டொலர் பெறுமதியானது. இதற்குப் பயன்படும் ஏவுகணை ஒன்று 3 கோடி ரூபாவாகும். இலங்கை வாங்கிய இக் கப்பலில் ராடரினால் கட்டுப்படுத்தும் பீரங்கி செயலிழந்து விட்டது.

இவ்வகை செய்திகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இவை குறித்து மேலதிகத் தகவல்களை வெளியிட முடியாதுள்ளது. ஆனால் - ஜி.எஸ்.ரி. என்றும் பாதுகாப்பு வரி என்றும் இவ்வகைச் செலவுகளுக்கு எல்லாம் தமது பணத்தைத் தந்து கொண்டிருப்பவர்கள் யாரோ, அவர்கள் தான் இவற்றைப் பற்றி மிகப் பிந்தி - கடைசியாக - அறிபவர்களாகவும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-உ)

## யுத்தத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிழக்கு எல்லைப்புறக் கிராமங்களின் பாடசாலை மாணவிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமரைச் சந்தித்து அவருடன் கலந்துரையாடினர். அவர்கள் மத்தியில் பேசும்போது பிரதமர் மேலும் கூறியதாவது:-

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நாம் எதனையும் செய்யத் தயாராக இருக்கிறோம். நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என்று புலிகள் எமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால் மட்டுமே அவர்களுடன் பேச்சுகள் நடக்கும். இல்லையேல் யுத்தம் தீவிரமாகத் தொடரும் - என்றார்.

## சமாதான முன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்கு பற்றிய பின்னர் நாடு திரும்புவார் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் அவருக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம் பெறும் என்பதை ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட எம்.பி. ஒருவரும் உறுதிப்படுத்தினார். (உ)

## சமாதானப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எரிக் சொல்ஹெய்ம் தயாரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இது விடயத்தில் இருதரப்புப் பிரதிநிதிகளுடனும் அவர், அவ்வப்போது தொடர்பு கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

தற்போது மேற்குநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பிய பின்னர், எரிக் சொல்ஹெய்மும் கொழும்பு வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும்பாலும் ஜனவரி இரண்டாம் வாரத்துக்குப் பின்னர் கொழும்பு வரும் சொல்ஹெய்ம், கொழும்பில் ஜனாதிபதியுடனும், வன்னிக்குச் சென்று பிரபாகரனுடனும் அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புக்களின் போது, தாம் தற்போது தயாரித்து வரும் அட்டவணைக்கு இறுதி வடிவம் கொடுத்து, அதன்படி செயற்படுவதற்கு இரு தரப்பினதும் உடன்பாட்டினைப் பெறுவதற்கு அவர் முயல்வார் என்று கூறப்படுகின்றது.

அத்தகைய உடன்பாடு ஏற்பட்ட பின்னரே, சமாதான முன்முயற்சிகளில் நகர்வு ஏற்படும் என்றும் -

நல்லெண்ணச் சூழ்நிலையும் அதைத் தொடர்ந்து பேச்சுக்கான வாய்ப்புகள் மற்றும் மோதல் தவிர்ப்பு இணக்கம் ஆகியவையும் ஏற்பட வாய்ப்புக் கிட்டும் என்றும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

சொல்ஹெய்ம் தயாரித்துவரும் செயற்திட்ட அட்டவணைக்கான அடிப்படை சரத்துகளுக்கு இரு தரப்பையும் இணங்க வைக்கும் ஆரம்பக் கட்ட முயற்சியில் கூட இரு தரப்பும் விட்டுக் கொடுக்காத -முட்டுக் கட்டை - நிலை நிலவுவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## சிவிலியன்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரும் பலியாகினர். இச் சம்பவத்தில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த கல்லாறு மாவட்ட வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் டியூக் அருள் பிரகாசம் (வயது 37) பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலைமையிலேயே மட்டக்களப்பு மாவட்ட டாக்டர்களும், ஆஸ்பத்திரி பணியாளர்களும் பாதுகாப்பு உத்தரவாதம் கோரி நாளை பேரணி நடத்த உள்ளனர். (ஐ-ம-21-5-6)


## ஆயிரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குறிப்பிட்ட நேரத்துக்குள் பயணிகளைச் சோதனை செய்து முடிப்பது தாமதமானதாலேயே 250 பயணிகள் திருப்பியனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இன்று காங்கேசன்துறைக்கு வரும் இக்கப்பல் இங்கிருந்து பயணிகளை ஏற்றிச் செல்லுமா என்பது குறித்துத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று வடபகுதி மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)


IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001


5000 மாணவர்களுக்கு



பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி, பாடசாலை மாணவர்களுக்கு ஏற்புவகையில் நன்கு திட்டமிடப்பட்ட பாடவிதானங்களைக் கொண்டது.

இப் புலமைப்பரிசில் திட்டத்தினிற் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

ஆசிரியர்கள், அலுவலகர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறிகளைக் கொண்டது.



விண்ணப்ப முடிவுத்திகதி 24/12/2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது

வருடம் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் இவ் வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

Institute of Informatics Studies (IIS)

Institute of Informatics Studies (IIS)

மிகக்குறைந்த கட்டணத்தில் விசேட கணனிப்பயிற்சி நெறிகள்

பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், உத்தியோகஸ்தர்களின் தேவை கருதி விசேடமாக உங்களுக்கென மிகக்குறைந்த கட்டணத்தில் கீழ்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளது.

ஆரம்பம் : 10-12-2000, சனிக்கிழமை பகல் 10.00 மணி

| பயிற்சிநெறிகள் | காலம் (மாதம்) | கட்டணம் |
|---|---|---|
| Ms Excel 2000 | 3 | 1250.00 |
| Ms Word 2000 | 3 | 1250.00 |
| Ms Access 2000 | 4 | 1500.00 |
| Ms Power Point 2000 | 2 | 1000.00 |
| dBASE III + | 4 | 1250.00 |
| Visual Basic | 4 | 2500.00 |
| Java | 5 | 3000.00 |

கடந்த அக்டோபர் மாதம் ஆரம்பித்த JAVA பயிற்சி நெறியில் இணையத் தவறிய மாணவர்கள் 10-12-2000 ல் ஆரம்பிக்கும் 2ம் பிரிவில் இணைந்து பயனடைந்து கொள்ளுங்கள்.

மேற்படி பிரிவு வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் இடம் பெறும்.

இக் கட்டணச்சலுகை இப்பிரிவுக்கு மட்டுமே வழங்கப்படும்

இயக்குனர்,
IIS. யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர் சிவலிங்கம்

(உதயன் விநியோகப் பகுதி முன்னாள் அலுவலர்)

வட்டு.மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணர் சிவலிங்கம் (உதயன் விநியோகப் பகுதி முன்னாள் அலுவலர்)நேற்று வவுனியாவில் காலமானார்.

இவர் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் துரைசாமி, தங்கம்மா, தர்மலிங்கம், முத்துத்தம்பி, நமசிவாயம், தம்பிஐயா (இந்தியா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.12.2000) ஞாயிற்றுக் கிழமை வவுனியா இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: எஸ்.சுதன்
(பெறாமகன்)

(C/14239)


2001ஐ வரவேற்போம்

மக்களின் நன்மதிப்பைப் பெற்ற கலண்டர்கள், டயறிகள் வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

- ★ பிரபல்யம் வாய்ந்த மெய்கண்டான் கலண்டர்கள், லீலா டயறிகள்
- ★ வியாபார ஸ்தாபனங்களின் பெயர் பொறிக்கக்கூடிய கண்கவர் சினிமா, சுவாமி மற்றும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த படக் கலண்டர்கள்.
- ★ மிகவும் புதுவகையான சினிமா, சுவாமிப்படங்களைக் கொண்ட POCKET கலண்டர்கள்.
- ★ அலுவலகங்களிலும் வங்கிகளிலும் உபயோகிக்கக் கூடிய MANAGEMENT (முகாமைத்துவ) டயறிகள்.
- ★ நான்கு மாதிரிகளிலான மிருதுவான முக அமைப்பைக்கொண்ட DESK டயறிகள் மற்றும் POCKET டயறிகள்.

இன்றே நாடுங்கள்!
வியாபாரிகள், மொத்த விற்பனையாளர்களுக்கு
விசேட கழிவு உண்டு.

PAPER HOUSE
300, HOSPITAL ROAD., JAFFNA.

(C/14225)

S.T.P Computer World
Number 54A, Palaly Road, Kantharmadam, Jaffna.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

உயர் கல்வி நிறுவன மாணவர்களுக்கானது
உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் பாடவிதானங்களை (Syllabus) உள்ளடக்கிய பயிற்சி நெறிகள்.
ஆரம்பம்: 16-12-2000
காலை 9.00 மணி

மாணவர்களுக்கான விடுமுறைக்கால பயிற்சி நெறிகள் (1 மாதம்)
(Information Technology for School Students)
ஆரம்பம்: 12-12-2000
காலை 9.00 மணி

பதவி வெற்றிடம்
Typist - English & Tamil (Full Time)

Director

பொருளியல்
S.ஜெயகுமார்
A/L 2001
DAY CLASS
வணிகப் பொருளாதாரம்
ஆரம்பம்: 11.12.2K
திங்கட்கிழமை 2.00 மணி
குருபரன்
கல்வி நிறுவனம்
புத்தூர்.
(81532)

வாழ்த்துகிறோம்
A/L 2003 இற்காக
O/L 2000 பரீட்சை
எழுதும்
மாணவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்
DMI
யாழ்.நகர்
(81292)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.